

BURN'S REFRACTORIES



பர்ன் ரிப்ராக்டரி தொழிற்சாலைகள் சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக வேலை செய்து வந்திருக்கின்றது மேல்முறையுடன கூடிய குழாய்கள் தயாரிப்பதில் இடைவிடாத ஆராய்ச்சி செய்து வந்திருக்கின்றனர். ரிப்ராக்டரி சாமான்கள் தயாரிப்பதில் இந்தியாவிலேயே வேறு எவருக்கும் இல்லாத அனுபவத்தைப் பெற்றுவிட்டனர்.

சாதாரண செங்கல்முதல், சலிகா, மாக்னஸைட், க்ரோம், மேலான அலுமினு, கோபுலா, செங்கல் சூளை கல், இரும்பை எதிர்க்கும் சிமிட்டிகள் முதலியவற்றை பர்ன் கம்பெனியார் தயாரிக்கின்றனர். இவை எவ்வித உஷ்ணத்தையும் தாங்கிக்கொள்ளும்.

இந்திய கூலியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்துடன் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. பர்ன ரிப்ராக்டரி சாமான்களால் பியூயல் செலவு குறைவாகும். எந்த உஷ்ணத்திற்கும் சிறந்து இருக்கும்

பூரா விவரங்களும் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

SAVE FOR VICTORY
BRITISH • WAR • SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,
ஸ்தாபிதம் : 1781
12, மிஷன்ரோ, கல்கத்தா.
தொழிற்சாலை : ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—
பாம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109. மதராஸ்.

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

ஆறு மாதத்திற்கு முந்தி இதே பையன்தான்

லிவர் பெருக்கினாலும் கொடிய குலைக்கட்டி நோயினாலும் இறந்து விடும் தருவாயில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த இந்தப்பையனை காப்பாற்றி புதிய உயிர் உண்டாக்கியது ஜம்மியின் லிவர்க்யூர். சென்ற 36 வருடங்களாகவே குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி முதலிய நோய்களுக்கு இது கை கண்ட அற்புத நிவாரணி.

ஜம்மியின் லிவர் க்யூர்

எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன.
ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ்,
மைலாபூர் — மதருஸ்.
சப் ஆபீஸ்: கும்பகோணம். பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சிராப்பள்ளி, விஜயநகரம்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரேசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்,
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 1 மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு.

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் எனனும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால ஒழுங்கு பட்டுவிடும்! ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN (S. M.) 42, Churchgate St., Fort, Bombay.
Phone 21343.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு.

விலை ரூ. 1—12—0 — தபாற்செலவு அணு 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras, Editor, C. R. Srinivasan B.A.

சுதேசமித்திரன்

Vol. 14 No 1 28-2-43 வாரப்பதிப்பு Price 2 Annas

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு 28 - 2 - '43

தலைவர்களின் கோரிக்கை

தன் ஆத்மபலத்தைக் கொண்டு 2 வாரத்துக்கு மேலாக உபவாசத்தை நடத்தி விட்டார் மகாத்மா. இப்போது மூன்றும் வாரம் நடந்து வருகிறது. அவரது விரதம் இனிது பூர்த்திபெற வேண்டுமே என எங்கும் பிரார்த்தனைகள் நடக்கின்றன. அரசியல் துறையில் எவ்வித வேற்றுமைகளிருப்பினும் காந்திஜியை இப்போது உடனே விடுதலை செய்ய வேண்டுமென்ற ஏகோபித்த கோரிக்கையில் எவ்வித வேற்றுமையுமில்லை. வைஸ்ராய்க்கும் பிரதம மந்திரி சர்ச்சிலுக்கும் ஏராளமாகத் தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

புதிய டில்லியில் தலைவர்கள் மகாநாடு கூடியது. ராஜாஜி, ஸர் தேஜ் பகதூர் ஸாப்ரூ முதலிய பல தலைவர்களும் கலந்து கொண்டார்கள். மகாத்மாவை விடுதலைசெய்து சமரஸத்தை நாடும்படி கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி வைஸ்ராய்க்கனுப்பினர். 'புதிதாக இப்போது எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை' என்று கோரிக்கையை நிராகரித்து விட்டார் வைஸ்ராய். நாளுக்கு நாள் மகாத்மாவின் தேக நிலை கவலைக்கிடமளிப்பதாகச் சர்க்காரே டாக்டர்களது அறிக்கைகளை விடுத்து வருகின்றனர். ஒவ்வொரு நாளும் அவரது தேக நிலையைச் அவர்கள் முன்னதாகத் தெரிந்து கொள்கிறார்கள். அப்படியிருந்தும் வைஸ்ராய் இம்மாதிரி பதில் சொல்வதுதான் ஆச்சர்யம். தலைவர்கள் கோரிக்கையை நிராகரிக்கு முன்புதான் நிர்வாக சபையிலிருந்து 3 அங்கத்தினர்கள் ராஜிநாமாச் செய்தனர். இது மகாத்மா உபவாசத்தை முன்னிட்டு நடந்த சம்பவம். இதுகூட மாறுதலாக வைஸ்ராய்க்குப் படவில்லை போலும்!

வைஸ்ராயிடம் தெரிவித்த கோரிக்கை பயன் படாது போகவே டில்லியில் கூடிய தலைவர்கள் பிரதம மந்திரிக்குத் தந்தி அனுப்பினர்கள். ஆனல் சர்ச்சிலும் அதை நிராகரித்து விட்டார். இக்கோரிக்கைக் கிணங்கி நடந்திருந்தால் மக்களின் மனம் குளிர்ந்திருக்கும்; மகாத்மா மனமும் குளிர்ந்திருக்கும்.

இம் மனக்குளிர்ச்சி, நேச நாட்டினர் எதிரியை எதிர்த்துப் போராடும் யுத்த களங்களில் பிரதிபலித்திருக்கும்.

★

ஸ்ரீ ஆனே — ஸ்ரீ ஸர்க்கார் — ஸர். மோடி

நிர்வாக சபையிலிருந்து நீங்கினர்

'காந்திஜி தேசத்தின் சொத்து. எனவே அவரது உயிரை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும்' இன்று இது தான் உலகத்தின் கோரிக்கை. அன்றுடம் மகாத்மாவின் தேகநிலை குறித்துச் சர்க்கார் விடுத்துவரும் அறிக்கைகள் நாட்டினரை நடுக்குறச்செய்கின்றன. தாங்கள் செய்யும் நடவடிக்கைகளுக்கெல்லாம் வைஸ்ராய் நிர்வாக சபையின் ஏகோபித்த ஆதரவிருப்பதாக இந்திய சர்க்கார் கூறிவந்தார்கள். ஆனல் இன்று எழுந்திருக்கும் நிலைமை வெகு விசித்திரமானது. இந்திய சர்க்கார் எந்தச் சபையைச் சுட்டிக்காட்டித் தங்களுடைய செய்கைகளுக்கு ஆதரவிருப்பதாகக் கூறினரோ அச்சபையிலேயே இப்பொது பிளவேற்பட்டு விட்டது. ஸ்ரீமான்கள் ஆனே, ஸர்க்கார், ஸர். மோடி ஆகியோர் ராஜிநாமாச் செய்து விட்டார்கள். சர்க்கார் கொள்கையைக் கண்டிக்க இதைவிடச் சிறந்த ருசுவேறு வேண்டியதில்லை.

மகாத்மா உபவாசம் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரச்னை வைஸ்ராயின் நிர்வாக சபை முன்பு எழுந்தது. இதில் ஒரேவிதமான முடிவுதான் இருக்கமுடியும். அதாவது எவ்வித நிபந்தனையுமின்றி மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டும் என்பது தான். இதில் அபிப்ராய பேதம் ஏற்படுமானல் பதவி வகித்துப் பயன் காண்பதென்ன? ஆகவே ஸ்ரீமான்கள் ஆனே, ஸர்க்கார், மோடி, ஆகிய மூவருக்கும் மனம் தாளவில்லை. ராஜிநாமாச் செய்துவிட்டார்கள். இவர்கள் ராஜிநாமாச் செய்ததற்கு லண்டன் "டைம்ஸ்" விஷயமறியாமல் விஷமத்தனமாக கற்பனை செய்திருக்கிறது. ஆனல் இது போன்ற மட்டமான மனப்பான்மையுடன் செய்யும் பிரசாரத்தால் மக்களை மயக்க முடியாது. இம்மூவர் ராஜிநாமாவும் ஏதோ சாதாரணமான சம்பவமென்று காட்டி அபிப்ராயத்தை மாற்றச் சர்க்கார் முற்படலாம். ஆனல் பண்டித குன்ஸ்ரு குறிப்பிட்டது போல் ஸ்ரீமான்கள் ஆனே, ஸர்க்கார், மோடி இந்த மூவரும் இந்த சமயத்தில் பதவியை ராஜிநாமாச் செய்ததன் மூலம் நாட்டின் நலமே தங்களுக்கு முக்கியம் என்பதை நிரூபித்திருக்கின்றனர். இந்தியாவின் சுயமரியாதையையும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

சென்ற வார நிகழ்ச்சிகள்

ராஜாஜி-பிலிப்ஸ் சந்திப்பு

காந்திஜியின் உபவாஸம் சம்பந்தமாக ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் 22-ந் தேதி இரண்டாவது தடவை மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸைச் சந்தித்துப் பேசினர். இவ்விருவரும் முதல் தடவை சந்தித்தது 19-ந் தேதி.

மத்திய சட்டசபையைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ புலாபாய் தேசாயும், ஸிந்து மாஜி பிரதம மந்திரி ஜனப் அல்லாபக்ஷும் 22-ந் தேதி மிஸ்டர் பிலிப்ஸைக் கண்டு பேசினர்.

* * * *

அஸ்ஸாமில் ஜப்பானிய குண்டுவீச்சு

சென்ற 23-ந் தேதி பிற்பகலில் வெடிகுண்டெறியும் சில ஜப்பானிய விமானங்கள் அஸ்ஸாமில் அமெரிக்க விமான தளத்தின்மீது குண்டுகளை வீசின. சொத்துச் சேதமேற்படவில்லை. உயிர் சேதம் சொற்பம்.

* * * *

முஸ்லீம் லீருக்காரர் கவலை

வங்க ராஜாங்க சபையின் 22-ந் தேதிய கூட்டத்தில் உபமான்யக் கோரிக்கைகள் பற்றி விவாதம் நடக்கையில் முஸ்லிம் லீக் எதிர் கட்சியைச் சேர்ந்த ஜனப் நூர் முகமது மகாத்மாவின் உபவாஸத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். காந்திஜி இந்தியாவின் உத்தம புதல்வரென்றும், அவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பது கண்டு நாடு பெருங் கவலையில் ஆழ்ந்திருப்பதாகவும் உபவாஸம் நீடித்தால் அவரது உயிருக்கே ஹானி ஏற்படலாமென்றும், ஆண்டவன் அவரது உயிரைக் காக்கவேண்டுமென்பதே அனைவரது பிரார்த்தனை என்றும் கூறினர்.

* * * *

1000 பவுனும், ரூ 20,000-ம் கைப்பற்றப்பட்டது

கள்ளிக்கோட்டையில் பிரபல அரபிய தேசத்து வியாபாரியான ஜனப் யூசப் சாகர் அப்துல்லா என்பவரிடமிருந்து 17-ந் தேதி மாலை பம்பாயிலிருந்து திருட்டுத்தனமாய் இங்கு கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்படும் ஆயிரம் பவுன்களையும், ரூ 20,000-யும் போலீஸார் கைப்பற்றினர். யூசுப் சாகரை பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார்.

இந்த இதழில்

	பக்கம்
போர் போகும் போக்கு	4
குண்டலகேசி	5
சங்கீதம்	7
மற்றோர் ஏகாதபத்தியத்தின் மறைவு	8
திட்டமான வாழ்க்கை	9
வஞ்சமா? வஞ்சகமா?	11
தமிழர் வீரம்	13
போன மச்சான் திரும்பி வந்தான் (சிறு கதை)	14
கூரை (நவ நாகரீகம்)	14
கதாசிரியரின் கடிதம்	15
கண்டுபிடித்தது யார்?	17
அவசியமானது தங்கமா? வெள்ளியமா?	18
ஏமாந்த புலி (சிறுவர் பகுதி)	19

ஆப்பிரிக்க அரங்கம்

டியுனிஸியாவில் தென் பகுதியில் அச்சுப் படை முன்னேறித் தாக்கி வருகிறது. நேசத் துருப்புகள் ஏற்கனவே கப்ஸாவைக் காலி செய்துவிட்டன. ஸஃஸா துறைமுகத்திலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ரயில்பாதையிலுள்ள ஸ்பிட்லா, கஸரின், பெரியானு ஆகிய முக்கிய ஸ்தலங்களை இப்போது எதிரிகள் கைப்பற்றிவிட்டார்கள். கஸரின் கணவாயும் எதிரி வசமாகிவிட்டது. அக்கணவாய் ஆல்ஜீரியா எல்லையை நோக்கிச் செல்லுகிறது அச்சுப்படை



கள் அக்கணவாய் வழியாக முன்னேறி, அதற்கு நேர் வடக்கேயுள்ள தாலா என்ற நகரை நெருங்கிவிட்டன. டெபஸா என்ற நேசத்தளம் தாலாவுக்கு 35 மைல் தென் மேற்கே இருக்கிறது. கஸரினுக்கு வடமேற்கே நேசத் துருப்புகள் தீவிரமாகத் திருப்பித் தாக்கி, அங்கு எதிரிகளின் முன்னேற்றத்தைத் தேக்கியிருக்கின்றன.

முதலில் அச்சுத் துருப்புகளின் கடுந்தாக்குதலுக்கு இலக்கானவை அமெரிக்கத் துருப்புகள். அவை சேதத்துடன் பின்வாங்க நேர்ந்தது. அவர்களுக்கு நேரடியான யுத்த அனுபவம் கிடையாதென்று ராய்ட்டர் நிருபர் எடுத்துக் காட்டுகிறார். அத்துருப்புகளுக்குப் போதிய தளவாடங்கள் சப்ளை செய்யப்படவில்லையென அமெரிக்காவில் ஒரு புகார் எழுந்திருக்கிறது. கிழக்கேயிருந்து டியுனிஸியாவுக்குள் புகுந்த பிரிட்டிஷ் படை மெடினைனிலிருந்து மாரத் அரண் வரிசை நோக்கிச் செல்லும் ரஸ்தா வழியாக முன்னேறிக்கொண்டிருக்கிறது.

* * * *

ரஷ்யப் போர் முனை

ரஷ்யர் கார்காவ் நகரையும் திரும்பப் பிடித்துவிட்டார்கள். டானட்ஸ் பகுதியில் சிக்கியுள்ள ஜெர்மன்படைகள் உயிர் தப்பக் கூடுமெனத் தோன்றவில்லை. நீப்பர் நதிக்கரையிலுள்ள நிப்ரோபெட்ரோஸ்க் என்ற முக்கிய நகருக்கு ஆபத்து அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இப்போதே அந்நகரையும், கீவையும் ஜெர்மனியர் காலிசெய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ராஸ்டாவைப் பிடித்த துருப்புகள் அதற்கு மேற்கேயுள்ள டகன்ராகை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன. தெற்கே காகஸஸில் சிக்கிய எதிரித் துருப்புகள் தங்களைச் சுற்றியுள்ள ரஷ்யப் படை வரிசையைப் பிளக்க தீவிரமாகத் திருப்பித் தாக்கி வருகிறார்கள். வடக்கே ஓரல் பகுதியில் போர் வலுத்துக் கொண்டிருக்கிறது. எதிரிகள் அங்கு பல புதிய படைகளை கொண்டு போயிருக்கிறார்கள். எனினும் ரஷ்யருக்கும் அந்நகருக்கும் இடையேயுள்ள தூரம் குறைந்து கொண்டு வருகிறது.

* * * *

செம்படைக்கு ஸ்டாலின் ஆக்ஞை

ரஷ்யப்படையின் 25—வது வருஷக் கொண்டாட்ட தினத்தன்று சோவியத் படையின் பிரதம சேனாதிபதி என்ற ஹோதாவில் ஸ்டாலின் பிறப்பித்த உத்தரவில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:— 3 மாதங்களாக ரஷ்யர் முன்னேறித் தாக்கி வருகின்றனர். இந்த 3 மாதத்தில் ஜெர்மனியர் 7000க்கு அதிகமான டாங்கிகளையும் 4000 விமானங்களையும் 17000 பீரங்கிகளையும் இழந்தனர். ரஷ்யா தனது ரிசர்வ்களை சதா பெருக்கி வருகிறது. காலம் ஜெர்மனிக்குப் பிரதிகூலமாகி வருகிறது. 20 மாதப் போரில் செம்படை 90 லக்ஷம் ஜெர்மனியரை போருக்கு அருகதையற்றவர்களாக்கியிருக்கிறது. இவர்களில் 40 லக்ஷம் பேர் கொலையுண்டனர். சென்ற 3 மாதங்களில் செம்படை 112 அச்சு டிவிஷன்களைத் தகர்த்தது. 7 லக்ஷம் ஜெர்மன் துருப்புகளுக்கு மேல் கொலையுண்டனர். 3 லக்ஷம் பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். ரஷ்யப் போர்முனையிலிருந்த ருமேனிய, இத்தாலிய, ஹங்கேரிய ராணுவங்கள் அடியோடு தகர்க்கப்பட்டுவிட்டன. ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனை இல்லாததால் ரஷ்யா தனியாகவே ஜெர்மன் ராணுவ பலத்தைத் தாங்கிவந்திருக்கிறது. விரோதியிடமிருந்து தேசத்தைவிடுவிக்க நான் பின்கண்ட ஆக்ஞைகளை வெளியிடுகிறேன். (1) உங்கள் ராணுவ ஞானத்தைப் பெருக்கிக் கட்டுப்பாட்டை பலப்படுத்துங்கள். (2) விரோதி துருப்புகளைத் தாக்குவதை பலப்படுத்துங்கள். எதிரியின் போக்குவரத்து லயன்களைத் துணிக்க வேண்டும். எதிரி துருப்புகளை வளைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்க மறுத்தால் அவர்களை அழியுங்கள். (3) எதிரி படை வரிசைக்குப் பின்பு கொரில்லாப் போர் முறையை அதிகரியுங்கள். இந்த மாதிரிப் பிரதிக்ஞை செய்தால் வெற்றி கிடைக்கும்.

* * * *

ரஷ்யர் வீரத்துக்கு பிரிட்டிஷ் பாராட்டு

ஸ்டாலின்கிராடுக்கு "கௌரவக் கத்தி"யை வழங்க பிரிட்டிஷ் மன்னர் தீர்மானித்திருக்கிறார்.

ரஷ்யக் குடியரசுத் தலைவருக்கு அவர் பின்கண்ட தந்தியை அனுப்பியுள்ளார்:—

"நமக்குப் பொதுவான விரோதிகளை முறியடித்து சரித்திரத்தில் மிகவும் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கும் செம்படையின் தீரத்தையும் திறமையையும் நானும் என் பிரஜைகளும் பாராட்டுகிறோம். ஸ்டாலின்கிராட் காட்டிய எதிர்ப்பே, யுத்தப் போக்கை மாற்றி, நாகரிகம், சுதந்திரம் ஆகியவற்றின் எதிரிகளை ஒடுக்கும் வழியைக் காண்பித்தது. நானும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள மக்களும் காட்டும் மகிழ்ச்சிக்கறிகுறியாக கௌரவக் கத்தி ஒன்றைத் தயாரிக்கும்படி ஆக்ஞாபித்திருக்கிறேன். அதை ஸ்டாலின்கிராடு நகருக்கு அளிக்க விரும்புகிறேன். எதிரிகளுடைய தாக்குதலை இங்கரம் சமாளித்து நின்றதை வருங்காலத்தினருக்கு இப்பரிசு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதே என் கருத்து. தவிரவும் பிரிட்டிஷ் மக்கள் மட்டுமின்றி நாகரீக உலகம் பூராவுமே கொண்ட மதிப்புக்கு இது சான்றாக விளங்கும்."

* * * *

எதிரிக்கு அவகாசம் கொடுத்தால்...

அமெரிக்க யுத்த இலாகா உதவிக் காரியதரிசி மிஸ்டர் ராபர்ட் பேடர்ஸன் கூறியதாவது:—

இவ்வருஷத்தில் யுத்தம் முடிவுடையாதென்று தோன்றுகிறது. 1944-ம் வருஷத்திலோ அல்லது 1945-லோ யுத்தம் முடிவடையலாம். நாஸிகளது பலம் குறைந்து வருவதும், நேச நாடுகளின் பலம் அதிகரிப்பதும் இந்த் கூற்றுக்கு ஆதாரமாக இருக்கின்றன. மிக்க கஷ்டமான போரின் மூலம்தான் வெற்றி பெற முடியும். ஜெர்மனியர் இன்னும் வல்லமையுள்ளவர்களாக இருக்கின்றனர். ஜெர்மானியர்களும், ஜப்பானியர்களும் திரும்பவும் பலம் பெற நாம் அவர்களுக்கு அவகாசம் கொடுத்தால் நாம் வெற்றியடைவது கஷ்டமே.

டியூனிஸியாப் போரில் நாம் இன்னும் பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும் எதிர் பார்க்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

* * * *

கனடா பிரதம மந்திரி எச்சரிக்கை

கனடா பிரதம மந்திரியான மிஸ்டர் மெக்கன்ஸிகிங் விடுத்த எச்சரிக்கையின் சாரம்:—தவறான நம்பிக்கையுடன் மக்கள் இருக்கக்கூடாது. போரின் உக்ரம் அதிகரிக்க அதிகரிக்க கனடியர் முன்பு ஒருபோதும் கண்டிராத அவ்வளவு கடுமையான சோதனைகளுக்கு 1943-ல் உள்ளாகவேண்டியிருக்கும். அச்சு நாட்டினருக்கு சமமான பலத்தைத் தற்போது பெற்றிருப்பதாக நேச நாட்டினராகிய நாம் கருதலாம். அதற்கு அதிகமான பலத்தை நாம் பெற்றிருப்பதாகச் சொல்ல முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

* * * *

ரூஸ்வெல்ட் திட்டம் கைகூடுமா?

1943-ம் வருஷத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தீர்மானித்த அளவுக்கு, யுத்தத்திற்கான தளவாட உற்பத்தியை அடைய முடியுமா என்பது மிகவும் சந்தேகமாயிருக்கிறதென்று யு. எஸ். ஸெனடர் மிஸ்டர் ஹார்லி கில்கோர் கூறினார். யுத்தத்துக்கான சாதனங்களை தயாரிக்கும் திட்டத்தில், ஒரு ஒழுங்கு முறை இல்லை என்று அவர் கூறுகிறார். மேலும் அவர் கூறியதாவது:—

யுத்தம் ஆரம்பமானபோது, 1942-ல் 60 ஆயிரம் விமானங்களும், 1943-ல் 125 ஆயிரம் விமானங்களும் உற்பத்தி செய்யவேண்டும் என்று ரூஸ்வெல்ட் கூறினார். ஆனால் 1942-ல் குறிப்பிட்ட அளவுக்கு உற்பத்தி செய்யப்படவில்லை. 1943-ம் வருஷத்திலும் குறிப்பிட்ட அளவுக்கு உற்பத்தி செய்ய இயலாது என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே உற்பத்தி அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த குறைந்த அளவையுங்கூட நாம் செய்ய முடியுமா என்பது சந்தேகமாயிருக்கிறது.

நேடாலில் புதிய ஆலோசனை போர்டு

நேடாலிலுள்ள இந்தியர்கள் விவகாரங்கள்பற்றி ஆலோசனைகள் கூற போர்டு ஒன்றை 1920-ம் வருஷத்திய சட்டப்படி சர்க்கார் ஏற்படுத்தியிருக்கின்றனர். நேடாலிலுள்ள இந்தியர்கள் விஷயமாக ஏற்படும் பிரச்னைகளை கவனித்து சர்க்காருக்கு அவைகளைப்பற்றி ஆலோசனை கூறுவதே இந்த போர்டின் பொறுப்பாகும். ஸெனடர் டி. ஜி. ஷெப்ஸ்டன் தலைமையில் இப்போர்டில் அனுபவம் வாய்ந்த பல ஐரோப்பிய, இந்திய அங்கத்தினர்கள் இருக்கின்றனர். நேடாலில் இந்தியர்களுக்கும் மற்ற வகுப்பினர்களுக்குமிடையே இந்நூதன ஏற்பாடு மூலம், ஒத்துழைப்பும் சமரஸ மனப்பான்மையும் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

(18-ம் பக்கம்)

5

'நம்ப வேண்டாம்'

★

வ. வேணுகோபாலன்

"நீ செய்யும் காரியங்கள் சோழ ராஜனுக்கும் வெறுப்பைத் தருகின்றனவாம். எவரும் உண்மையாக உன்னிடம் அபிமானம் கொள்ளவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. நாளடைவில் பகைவர்களே உனக்கு மிகுதியாவார்கள். அதைப்பற்றி நீ சிறிதும் கவலைகொள்ளவில்லை. நாள்தோறும் நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன், "கிழவன் ஏதோ பிதற்றுகிறான்" என்று இகழாதே. வயது முதிர்ந்தவனெனினும் உனக்கு நான் தந்தை; அதனால் என் வார்த்தைகளை நம்பி, அதற்குத் தக்கவாறு நடந்துகொள்" என்றான் ஏனாதி பெருஞ் சாத்துவன்.

"சோழ ராஜன் என்னை வெறுத்தால் என்ன? விரும்பினால்தான் என்ன? யான் செய்யும் காரியங்கள் எல்லாம் புத்த தேவனுக்கு உகந்தவையே என்பதில் ஐயம் இல்லை. புத்த தேவன் அருளிய பிடகத்திரயத்தை உணர்ந்தவர்கள் என் மீது குற்றம் கூறார். சோழராஜனுக்கு அவை தெரியாததல்ல. சோழராஜன் என்னை வெறுப்பதாக உங்களிடம் சொல்லியது யார்?" என்றான் மைந்தன் ஸத்துகன்.

"உன் இளமைப் பருவத்து நண்பன் இளந்தத்தனே அவ்வாறு கூறினான். உனது பௌத்த சங்கத்தைப்பற்றி ன்மை தீமைகளைக் கவனிக்குமாறு அவனுக்கு அரசன் கட்டளையிட்டிருக்கிறாராம். பௌத்த மதத்திற்கு உடன்பாடில்லாத பல காரியங்களை உன் ஸத்துக மந்திர பௌத்த சங்கத்தினர் செய்கின்றனராம்; இன்னும்...,ஏதேதோ சொன்னான் அவன்" என்று கூறுவதற்குள் ஸத்துகனுக்குக் கோபம் மூண்டது.

கொள்கையை மாற்றமாட்டேன்

"அவன் சொல்லுவதற்கென்ன! நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தீர்களே! அதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. அரசன் கட்டளை எனக்குத் தெரியும். இளந்தத்தனின் வஞ்சகமும் தெரியும். உயிருள்ள வரையில் என் கொள்கையை யாருக்காகவும் மாற்றிக்கொள்ளமாட்டேன். என்னைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்" என்று கூறிவிட்டுக் கொதித்து எழுந்தான் ஸத்துகன்.

"உன்னைப்பற்றி நான் கவலைப்படாமலிருக்க முடியாது. நீ கோபம் கொள்வதில் பயனில்லை. உன் நன்மைக்காகச் சொல்லுகிறேன். இன்னும் ஒன்று. உன் பௌத்த சங்கத்தில் காளன் என்பவன் யார்? அவனைப்பற்றியும் சொன்னான்; வேறு பலர்கூடச் சொன்னார்கள். களவும் கொலையும் செய்து வருகிறான் அவன் என்று கூறுகிறார்கள். சில நாட்களுக்குமுன் யவனர் வீதியில் களவு செய்து, மூன்று யவன வீரர்களைக் கொலை செய்துவிட்டு ஓடிப் போனான் என்றும் கூறினான். உன்னிடம் சொல்லுவதற்கு அஞ்சி என்னிடம் சொன்னான். காளன் என்பவனை நான் பார்த்ததில்லை என்று சொல்லிவிட்டேன்; அவன் யார்?" என்றான் பெருஞ்சாத்துவன்.

பழிமொழியால் குறைவில்லை

"அவனைப்பற்றித் தெரிய வேண்டிய அவசியமென்ன? அவன் குற்றம் அற்றவன். புத்த பக்தி மிக்கவன்; புத்த தேவனுக்கன்றி வேறு எவருக்கும் தலை வணங்கான். பௌத்த சங்கத்தைப்பற்றிப் பழித்து, இழிவு படுத்திக் கூறுபவர்களை அவன் பழி வாங்குவதற்குப் பின்னடையான். காரணமின்றி எவருக்கும் துன்பம் செய்யான். பொருளையே மதித்துப் புத்தனை மறந்து இரவலர்க்கு ஈயாது பொழுதுபோக்கும் பாபிகளை அவன் துன்புறுத்திப் பொருள் கவர்ந்து பௌத்த சங்கத்திற்கு அவற்றை அளிக்கிறான். தன்னலம் என்பதே அவனுக்கு இல்லை. அவனைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? கொலைபாளி என்றும் கள்வன் என்றும் அவனைக் கடிந்து பழிமொழி கூறுவதால் குறை சிறிதும் அவனுக்கு இல்லை" என்று கூறிவிட்டு மேல் மாடத்திலிருந்து விரைந்து கீழே இறங்கினான்.

ஸத்துகன் தந்தை ஏனாதி பெருஞ்சாத்துவனுக்கு எண்பது வயசுக்குமேல் ஆகிவிட்டது. புன்முறை ஸத்துகனுக்கு அவன் புத்தி கூறியும் பயனில்லை. அன்றைய தினம் கடைசி முறையாகக் கூறினான். தன் ஒரே புதல்வனாகையால் ஸத்துகன் மீது அவனுக்குக் கோபம் உண்டாகவில்லை. எனினும் உள்ளூர வருத்தந்தான். பெருஞ்சாத்துவன் வார்த்தையை எப்போதும் ஸத்துகன் கேட்பதில்லை. எனினும் புதல்வனைக் குறித்துத் தந்தைக்குக் கவலை அதிகமாகிக்கொண்டே இருந்தது. 'எந்த வினாடியில் ஸத்துகனுக்குத் துன்பம் வந்துவிடுமோ?' என்ற பயம் அவனுக்கு. அதைப்பற்றிய சிந்தனையே இல்லை ஸத்துகனுக்கு. தந்தை என்ற அளவுக்குக் கௌரவம் அளித்தான் ஸத்துகன். புதல்வனிடமுள்ள பாசத்தால்

"ஸத்துகன் குதூகலத்துடன் உள்ளே புகுந்ததும் பத்திரை உவகையுடன் அவனைப் பூவணையில் அமர்த்தி உபசரித்தாள்"

அன்று கடைசி முறையாகக் கூறினான்; அவ்வளவுதான்; அன்று தொடங்கி ஸத்துகனுக்குப் புத்தி புகட்டுவதையே விட்டுவிட்டான்.

தன் தந்தையிடம் கோள் கூறிய இளந்தத்தனைத் தக்கவாறு தண்டிக்கவேண்டுமென்று எண்ணியவனாய்க் கீழே இறங்கினான் ஸத்துகன். அவன் மனம் பலவாறு ஊசலாடியது. மாளிகையின் உட்புறத்திலுள்ள அறையில் புகுந்து அமர்ந்தான். அப்போது ஸத்துகனைக்கண்டு பேசுவதற்குச் சமயம் பார்த்திருந்த பாலகன் என்னும் நண்பன் ஸ்த்துகன் முன்பு வந்து வாய் புதைத்து நின்றான். அவனைக் கண்டதும் ஸத்துகனுக்குக் கோபம் மிகுதியாயிற்று.

“பாலகா, நான் முன்பே சொன்னேன். இப்போது எல்லாம் கெட்டு விடும்போல் இருக்கிறது. நம் காரியங்களைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் நடக்கின்றன. சேனாபதி இளந்தத்தனுக்குத் தக்கவாறு புத்தி புகட்டவேண்டும். என்னுடன் இளமையில் பழகியவனாதலால் என்னிடமே அவன் வன்மையைக் காட்டுகிறான். நமது பௌத்த சங்கத்தைப் பற்றி அரசனிடம் கோள் கூறியிருக்கிறான். ஆதலால் நாம் கவனமுடன் இருக்கவேண்டும். காளனை அடக்குவதற்கு வழி தேடுகிறான். நீ அவனைப்பற்றிக் கவனமுடன் இரு: நான் பத்திரையைப் பார்க்கப் போகவேண்டும்; நீ போய்வா” என்றான்.

“அப்படியா? சோழராஜன் ஒற்றறியும் கூட்டத்திற்கு இளந்தத்தனைத் தலைவனாக்கியிருக்கிறான்; அதனால்தான் இத்தகைய மாறுபாடுகள். இருக்கட்டும். இளந்தத்தன் வன்மையை நான் அடக்கி விடுகிறேன்” என்று கூறிவிட்டுச் சென்றான் பாலகன்.

உள்ளக் கிளர்ச்சி

ஸத்துகன் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. பகற்பொழுதின் பிற்பகுதியாகையால் பகலவனின் வெம்மை தணிந்திருந்தது. சாளரங்களின் வழியாக வேகமாகத் தென்றல் காற்று வீசியது. வருத்தத்தில் ஆழ்ந்திருந்த ஸத்துகனுக்குப் பல பாம்புகள் ஒருங்கே சீறுவன போன்று இருந்தது அத்தென்றல் காற்று. வேறு வருத்தம் இல்லை. பத்திரையை நினைந்துதான். பத்திரையின் வடிவத்திலே அவன் மனம் ஒன்றியிருந்தது. அன்றைக்கு முதல் நாள் மாலையில் பத்திரை கூறிய வார்த்தைகள் அவன் செவிகளில் ஒலித்த வண்ணமாயிருந்தன. அந்த எண்ணிக் காமன்கோட்டம் போவதற்கு ஒருப்பட்டது அவன் மனம். ஆனால் அதற்கு முதல்நாள் இரவு சயந்தி கூறிய—பொருள் செறிந்த, உணர்ச்சி நிறைந்த அவ்வார்த்தைகள் ஸத்துகனின் உள்ளத்தைத் துன்புறுத்தின. கண்களில் நீர் ததும்ப அவள் பார்த்த பார்வை இடையிடையே அவன் மனக்கண் முன் தோன்றி வருத்தும். ஆனால் பத்திரையின் இன்பம் நிறை மோகப் பார்வையில் அவன் உள்ளம் மூழ்கி மூழ்கி எழுந்தது. அதனால் அரைக்கணங்கூட அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை, விரைந்து எழுந்து குதிரைக் கொட்டிலுக்குச் சென்றான். குதிரையைத் திருப்பிக் குதூகலத்துடன் அதன் மீது உட்கார்ந்தான். அவ்வளவுதான் குதிரை வீதி வழியே புறப்பட்டது. அவன் மனம் பத்திரையைப்பற்றிக் கற்பனை செய்து கொண்டிருந்தது. அப்போது என்றைக்கும் இல்லாதபடி அரச வீதி வழியாகச் சென்றது அவன் குதிரை. எந்த வழியாகச் செல்கிறது குதிரை என்பதைக் கூட அவன் கவனிக்கவில்லை. சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் அவன் மனம் குதிரை மந்தகதியாகச் செல்வதைக்கூட உணரவில்லை. ஸத்துகன் மனத்திரையில், இரண்டு முகங்கள் தோற்றம் அளித்தன. புன்னகை ததும்பும் முகமொன்று; கண்ணீர் ததும்பும் முகம் ஒன்று. பத்திரையின் புன்னகை ததும்பும் முகம், அவனுக்கு உள்ளத்தில் உணர்ச்சியை நிரப்பிப் புதுமை இன்பத்தை அளித்தது. காதற் கணிகை சயந்தியின் கண்ணீர் ததும்பிய முகம் அவனுக்கு வெம்மையை அளித்து, உள்ளத்தில் துன்ப அலையை எழுப்பியது. அவ்விரண்டு முகங்களில் ஒன்றை மறப்பதற்கு அவனுக்கு வன்மை இல்லை; மனத் திண்மையும் இல்லை. அரச வீதி வழியே மந்த மாருதமெனச் செல்லும் குதிரை மீது, இறுமாந்து வான வெளியை நோக்கியவண்ணம் அமர்ந்திருந்தான். அவன் உள்ளம் மனோலோகத்தில் சஞ்சரித்தது.

வீதியில் கண்ட காட்சி

மாலைக் காலம். ஆதலால் வீதியில் ஜனங்களின் கூட்டம் மிகுதியாகவே இருந்தது, இளம் பெண்கள் பல்வகை அலங்காரங்களுடன் அவ்வழியே இயங்கிக்கொண்டிருந்தனர். ஸத்துகனின் வடிவத்தைக் கண்டு இரங்கி, உள்ளம் உருகினர். வனப்பும் வன்மையும் இளமையும் ஒருங்கே கொண்ட இளைஞன்-ஸத்துகனின் வடிவம் இள மடமங்கையரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டாலும், அவன் அவர்களைச் சிறிதும் நோக்கவில்லை. ‘நம் தலை விதி யாரையோ மணந்துகொள்ளும்படி ஆயிற்றே! இந்தச் சுந்தர மேனியானை மணந்துகொள்ளும் பாக்கியம் பெற்றவள் யாரோ?’ என்று எண்ணி அவன் வடிவத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டே சென்றனர் மணமடந்தையர். சில மகளிர் மயங்கித்தயங்கி நின்றனர். தன்னை நோக்கி தயங்கி நிற்கும் அம்மட மங்கையரை அவன் சிறிதும் நோக்கவில்லை. அம்மடமங்கையரது அழகு கண்டு மயங்கி நிற்கும் இளைஞர்களையும் அவன் பார்க்கவில்லை. ஆடவரும் மகளிரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சென்றனர். அவர்கள் பேச்சு அவன் காதில் சிறிதும் விழுந்தில. அங்குமிங்குமாகப் பறவைகள், கூவிப் பறந்துகொண்டிருந்தன. கிளிகள் கொஞ்சிக்கொண்டிருந்தன. வழியிடையுள்ள மரங்கள் மீது மிக அழகாகக் கூவிக்கொண்டிருந்தது குயில். பெண் அன்றில் ஆணன்றிலை அழைக்கிறது. அவை ஏன் அவன் காதில் விழும்? மிகுந்த கவலையில் அவன் மனம் ஆழ்ந்திருந்தது. விழித்திருந்தும் நோக்கானாய், செவியிருந்தும் கேளானாய் பிரதிமைபோல் அசையாமல் அமர்ந்திருந்தான்.

அரச வீதியைக் கடந்து கொண்டிருந்தது குதிரை. அப்போதுதான் ஸத்துகனுக்குத் தான் செல்லும் வழியைப்பற்றிய ஞாபகம் வந்தது. உடனே அங்கிருந்தபடியே குதிரையைக் காமன் கோட்டத்திற்கு விரைவாகச்செலுத்தினான். அப்போது அரச வீதியின் எல்லையில் ஒரு மாளிகையின் வாசலில் சிலர் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களின் பார்வை, அவ்வழியே குதிரை மீது செல்லும் ஸத்துகன் மீது விழுந்தது. அவன் அதைக் கவனிக்கவில்லை.

காரணம் என்ன?

பேசிக்கொண்டிருந்தவர்கள் இளந்தத்தனும் அவன் நண்பர்களுமே; ‘இவ்வளவு விரைவாக, இவ்வீதி வழியே ஸத்துகன் போவதற்குக் காரணம் என்ன? இவன் எங்கே போகிறான்?’ என்று ஆலோசித்தான் இளந்தத்தன். உடனே தன் நண்பர்களுக்கு விடை கொடுத்துவிட்டுத் தன் குதிரை மீது ஏறிப் பின் தொடர்ந்தான் இளந்தத்தன். ஸத்துகனை நெருங்காமலும், அகலாமலும் மறைந்து சென்றது அவன் குதிரை. ‘நாம் பின்னே தொடர்வது அவனுக்குத் தெரிந்து விடுமோ?’ என்ற பயம் இருந்தது அவனுக்கு. ஆனால், ஸத்துகன் போகும் இடத்தை அறிய ஆவலும் இருந்தது. பத்திரையின் அழகிலே உள்ளத்தைப் பறி கொடுத்த அவனுக்குத் தன்னைப் பின் தொடரும் இளந்தத்தனைப்பற்றி அறிய சிந்தனை இருக்குமா?

வளைந்து வளைந்து செல்லும் பாம்பின் போக்கை ஒத்திருந்தது இளந்தத்தன் மறைந்து செல்வது. இவன் இவ்வாறு பதுங்கிச்செல்வதைக் கண்டு சிலர் வியப்பும் ஐயமும் கொண்டு சென்றனர். காமன் கோட்டத்திற்குள் புகுந்தது ஸத்துகனின் குதிரை.

பத்திரை எங்கே?

வழக்கம்போல், பத்திரை தங்கியிருக்கும் கூடாரத்திற்கு முன்புதான் குதிரை நின்றது. மிகுந்த ஆவலோடு குதிரையிலிருந்து குதித்துக் கூடாரத்துக்குள் புகுந்தான் ஸத்துகன். ஆனால் உள்ளே புகுந்ததும் அவன் மனம் ஏமாற்றமடைந்தது. பத்திரையோ, வசந்தியோ—ஒருவரும் இல்லை அதனுள். உடனே வெளியில் வந்து யவன வீரர்களைக்கேட்டான். காமன் கோட்டத்திற்குள் போயிருப்பதை அவ்வீரர் கூறினர். அப்போதுதான் ஸத்துகனுக்கு ஆறுதலுண்டாயிற்று—மனத்தில் அமைதி நிலவியது.

அருகில் இருந்த மஞ்சத்தில் உட்கார்ந்தான். குளிர்ந்த காற்று வீசியது. அன்றைக்கு மறுநாளோடு இந்திர விழா முடிந்துவிடுகிறது; ஆகையால் மக்களின் கூட்டம் அங்கே மிகுதியாகக் காணப்பட்டது. அல்லாமல், காமன் கோட்டத்தைச் சூழ்ந்திருந்த அந்தச் சோலையில் மகளிரே மிகுதியாக இயங்கிக் கொண்டிருந்தனர். பேதைமுதல் பேரிளம் பெண் இறுதியாக உள்ள எழுவகைப் பருவத்து மகளிரும் குதூகலத்துடன் அங்கு உலாவிக்கொண்டிருந்தனர். வேடிக்கைகள் விநோதங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அவை யாவும் ஸத்துகன் மனத்துக்கு வெறுப்பாக இருந்தன. தன் வாழ்க்கையில் அன்றுவரை அவன் புரிந்த ஒவ்வொரு செயல்களும் அலைமேலலையாக அவன் மனக்கண் முன் தோன்றின. தான் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றையும் சீர் தூக்கிப்பார்த்தான். அவை அவனுக்கு மனக்கலக்கத்தை அளித்தன. தன்மீது தனக்கே அவநம்பிக்கை உதயமாயிற்று. அப்போது அவனது இருண்ட மனத்திற்கும் கண்களுக்கும் ஒளி கொடுத்தாற்போல் எதிரில் தோன்றினாள் பத்திரை. பத்திரையின் மதிவதனத்தைக் கண்டதும் ஸத்துகனுடைய மனக்கலக்கம் மறைந்தது. அவனைக் கண்டு பூங்கொடிபோல் ஒல்கிக் குறுநகை புரிந்து நின்றாள் அவள். ஸத்துகன் விரைந்து எழுந்து அவளது தளிர்க்கரத்தைப் பிடித்துக்கொண்டு, “பத்திரை இவ்வளவு விரைவில் வந்துவிட்டாயே! என்ன காரணம்? என் நிமித்தமாகவா?” என்றான் குதூகலத்துடன்.

இன்பக் கடல் சந்திப்பு

முத்து நிரை நிகர்த்த பற்களின் ஒளியழகு, இலவின் மலரன்ன இதழ்களிரண்டின் இடையே பொலிவுடன் தோன்றப் புன்னகைபுரிந்தாள். அவ்வளவில் அவள் இரு கன்னங்களும், தாமரையின் பேரிதழ் போல் சிவந்தன. பிறையென விளங்கிய அவள் நெற்றியில் வியர்வை துளிர்த்தன. கருவிழியில் தீட்டிய மையுடன் கலந்து கரைந்து, உதிர்ந்தன நீர்த்துளிகள். விம்முறும் மார்பில் வீழ்ந்த அக்கண்ணீர், பலவாறு சிதறிவிழுந்தன. குனிந்த தலையுடன், ஸத்துகனது கர மலர்பற்றிய வண்ணம் கூடாரத்திற்குள் புகுந்தாள். இதைக் கண்டு வசந்திக்கு வியப்பு உண்டாகவில்லை. நாள்தோறும் இந்நிகழ்ச்சிகளைப் பார்ப்பவள் தானே! அவள் இதில் செய்யக்கூடியது என்ன? நேருக்கு நேர் இரண்டு கடல் சந்திக்கின்றன, உப்புக்கடலல்ல—இன்பத் திரை காதற் கடல்!—இதற்கிடையே அணைபோட்டுத் தடுக்க யாரால் இயலும்?

‘காமன் பூசனை முடிந்தது; காமன் காட்சியும் கிடைத்துவிட்டது!’ என்று தனக்குள் வசந்தி கூறிக்கொண்டே அங்கிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்தாள்.

(16-ம் பக்கம்)

பண்டைக்காலப் போர் முறை

கோட்டைகள்

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

பண்டைக்காலம் முதலே யுத்தத்தில் கோட்டைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்கி வந்திருக்கின்றன. எந்த ராஜ்யத்திலும், ஒவ்வொரு மாகாணத்திலும் சில கோட்டைகளாவது இருக்கும், அவற்றைக் காக்க ஒரு சிறு படை அங்கே நிறுவப்பட்டிருக்கும். அவர்கள் உள்நாட்டின் அமைதியை நிலைநாட்டவும் பெரிதும் உதவியாக இருப்பர்.

நம் நாட்டின் மத்திய காலத்துச் சரித்திரத்திலே இத்தகைய கோட்டைகளைப்பற்றி நாம் அடிக்கடி படித்திருக்கிறோம். அவை ஒவ்வொன்றும் பலமாகக் காவல் புரியப்பட்டு வந்திருக்கிறது. ஒரு கோட்டையை எதிரி பிடித்துக் கொள்வதற்கு முன் அவனுக்கு ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் அவன் வீணில் மாதக் கணக்கில், சில ஸமயங்களில் வருஷக் கணக்கிலும், செலவழிக்கும் காலத்தையும் பார்க்கும்போது அதன் பலத்தை நாம் ஒருவாறு உணரலாம். முற்றுகைக் காலங்களில் ஏற்படும் ஆள்சேதத்தைநாம் கணக்கிட முடியாது.

இந்தக் கோட்டைகளே அவை நின்ற நாடுகளுக்கு நடுநாயகமாக விளங்கிவந்தன. ஒருகோட்டை வீழ்ந்துவிட்டால் அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் எதிரி வசம் ஆகிவிடும். அதனால் மன்னர்கள் தங்கள் நாடுகளை நன்றாகப் பாதுகாக்க வேண்டி அங்கங்கே முக்கியமான இடங்களில் அமைந்திருந்த கோட்டைகளை நல்ல நிலைமையில் வைத்திருந்தார்கள். கோட்டைகள் இல்லாத இடங்களில் புதியவற்றை எழுப்பினார்கள்.

நான்கு வகைப்பட்டன

கோட்டைகள் கிரிதுர்க்கம், ஸ்தல துர்க்கம், ஜல துர்க்கம், வனதுர்க்கம் எனநான்கு வகைப்படும். இவற்றைத் தமிழில் மலையரண், நிலவரண், நீர் அரண், காட்டரண் என்று கூறுவார், ஆயினும் கோட்டைக்கும் அரணுக்கும் சிறிது வேறுபாடு உண்டு. அவற்றை மேலே கூறுவோம். சில ஆசிரியர்கள் கோட்டைகளை எட்டு விதங்களாகவும் பிரித்துக் கூறுவர்.

பெரும்பாலான கோட்டைகள் மண்ணிலேயே கட்டப்பட்டிருக்கும். கற்கோட்டைகள் நாட்டின் எல்லைப்புறத்திலேயும் தலை நகரத்திலேயும் தான் கட்டப்படுவது வழக்கம். உள் நாட்டிலும் சில முக்கியமான இடங்களில் கற்கோட்டைகள் இருப்பதும் உண்டு. ஆயினும் கற்கோட்டைகள் யாவும் அரசனுடைய நேர்ப் பார்வையிலே இருக்கும். மண்கோட்டைகளே சிற்றரசர்கள் வசமும் அதிகாரிகளின் ஆளுகையிலும் இருக்கும்.

கோட்டைகளை நல்ல அரண் வலி உள்ள இடங்களிலேயே கட்டுவார்கள். மலையரண் கொண்ட கோட்டைகள் யாரும் ஏறமுடியாதபடி செங்குத்தாக அமைந்த பாறைப் பக்கங்களிலே கட்டுவார்கள். அவற்றுக்குப் போக ஒரே வழி மட்டில் இருக்கும். அதனை நன்றாகப் பாதுகாத்து வருவார்கள். அதனால் அக்கோட்டைகளை யாரும் அணுகமுடியாது.

பக்கத்திலே அகலமும் ஆழமுமான நீர் நிலயங்களைக்கொண்ட இடங்களிலேயும் கோட்டைகள் கட்டப்படும். வற்றாத ஆறுகளோ, குளங்களோ இல்லாத இடங்களில் கோட்டையைச் சுற்றி நல்ல அகழி இருக்கும். சில அகழிகளில் முதலை முதலிய துஷ்ட ஜந்துக்களையும் விட்டு அவற்றுள் ஒருவரும் இறங்க முடியாதபடி தடுத்து விடுவதும் உண்டு.

மண் கோட்டை அமைப்பு

சாதாரணமான மண்கோட்டைகளைச்சுற்றிமுள்வேலி போடப்பட்டிருக்கும். அன்றி, பக்கத்தில் படை அணுகா வண்ணம் வழியைத் தடுத்துக் கூரிய பாறைகளையோ மூங்கில்களையோ நட்டுவைத்திருப்பர்.

எல்லைப்புறத்துக் கோட்டைகளுக்குப் பக்கத்தே பெரிய காடுகளை வளர்த்திருப்பது வழக்கம். “எல்லைப்புறக் கோட்டைகளுக்குப் பக்கத்தில் உள்ள காடுகளை நன்றாக விருத்தி செய்ய வேண்டும். உள்நாட்டிலே உள்ள காடுகளை அழித்து விட வேண்டும். அப்போதுதான் ராஜ்யத்தில் திருடர் பயம் ஒழியும்” என்று கிருஷ்ண தேவ ராயர் தாம் எழுதிய ‘ஆமுக்த மால்யதா’ என்னும் நூலிலே கூறியுள்ளார். அவரே அதை நடைமுறையிலும் காட்டியிருக்கிறார். விஜய நகர ஸாம்ராஜ்யத்தின் எல்லைப் புறத்தே கிழக்கே உரியா நாட்டுப் பக்கத்தில் அடர்ந்த காடுகள் இருந்தனவென்றும், அவை அவ்விரு நாடுகளுக்கும் சிறந்த அரணாக அமைந்திருந்தன வென்றும் அந்தக்காலத்தே நம் நாட்டுக்கு வந்திருந்த ஐரோப்பியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாக ஒவ்வொரு கோட்டைக்கும் கொத்தளம், அலங்கம், கைபிடிச் சுவர். கோபுரம், கொடிமரம் முதலியன உண்டு. சில முக்கியமான இடங்களிலே கோட்டைக்குள்ளே பிள்ளைக் கோட்டையென்று மற்றொரு சிறு கோட்டையும் இருக்கும்.

கோட்டைச்சுவர்களை ஒட்டி அங்கங்கே எழுப்பியிருக்கும் கொத்தளங்களில் பீரங்கி முதலிய ஆயுதங்களைப் பொருத்துவதற்கு வசதியாக இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கும். பாஷாண யந்திரங்கள் என்ற அவை போர்க்காலங்களில் எதிரிகளின் மீது கல், கட்டி, இரும்புத்துண்டு ஆகியவற்றைப் பொழிந்து ஏராளமான சேதத்தை விளைவிக்கும். அவற்றைத் தவிர ஆகாசவாணம், அர்த்த சந்திர பாணம் என்ற பெயர்கொண்ட வெடிவகைகள் பலவும் இருந்திருக்கின்றன.

கோட்டைச் சுவர்கள்

முக்கியமான கோட்டைகளுக்கு அரணாக அமைந்திருக்கும் இரண்டு வரிசைகள் இருந்திருக்கின்றன. விஜயநகரத்துக் கோட்டைக்கு ஏழு சுவர்கள் இருந்தனவென்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

கோட்டைச்சுவர்கள் அடிபருத்து நுனிசிறுத்து எழுப்பப்பட்டுள்ளவை. அடிப்பாகங்களில் இருபது முதல் முப்பது அடிவரையில் அகன்றிருக்கும். நுனியில் ஆறுமுதல் பத்துவரையில் இருக்கும். கோட்டைச் சுவரை எழுப்புங்கால் உள்ளேயும் வெளியேயும் தனி தனிச் சுவர்களை எழுப்பி நடுவில் ஏற்படும் இடைவெளிகளை மண், கல்போன்ற சாமான்களைக் கொண்டு நிரப்புவார்கள். மண் கோட்டைகளிலே, அந்த இடைவெளி வைக்கோல், உமி முதலியவற்றால் நிரப்பப்பட்டிருக்கும். அப்படி எழுப்புவதால் சுவர்களை உடைத்து உள்ளே நுழைவதற்கு வழி ஏற்படுத்த முடியாது.

கோட்டைகளை நாம் எல்லா வசதிகளும் கொண்ட நகரங்களாகவே கூறலாம். அதனுள் தெருக்களும் வீடுகளும் உண்டு. சாதாரணமாக முக்கியமான நகரங்களைச் சுற்றி எழுப்பப்பட்ட சுவர்களே அந் நகரங்களுக்குக் கோட்டை என்ற பெயரைக் கொடுத்தது போலும். உள்ளிருப்பவர்களுடைய உபயோகத்துக்காகக் கோவில், குளங்களும் உண்டு.

எதிரிகள் வந்து கோட்டையைத் தாக்கும் போது, கோட்டை முற்றுகையிடப்படுமாதலால், உள்ளிருக்கும் ஜனங்கள் வெளியே போய் வர முடியாமல் போகும். அது சில சமயங்களில் மாதக் கணக்காக நடைபெறும். அக் காலங்களிலே அவர்கள் அதிகமான கஷ்டப்படாமல் உயிர் வாழ்வதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் கோட்டைக்குள் சேமித்து வைக்கப் பட்டிருப்பது வழக்கம்.

முகம்மதிய அரசாங்கத்தில் கோட்டைக் காவலர்களுக்குக் கில்லேதார் என்று பெயர். அவர்கள் பெரும்பாலும் ராணுவ அதிகாரிகளாகவே இருப்பார்கள். அவர்களால் அன்றோ கோட்டையும் அதைச் சேர்ந்த நாடும் காக்கப்பட்டு வந்தது.

கோட்டை அதிகாரிகள் நியமனம்

விஜய நகர ஸாம்ராஜ்யத்தில் கோட்டையதிகாரிகளில் பலர்பிராமணர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தண்டநாயகர்களாகவும் சேனாபதிகளாகவும் இருந்திருக்கின்றனர். கிருஷ்ண தேவராயர் பிராமணர்களையே கோட்டையதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். “எந்த அரசனும் தன்னிடம் பரம விசுவாசம் கொண்ட பிராமணர்களையே கோட்டையதிகாரிகளாக நியமிக்க வேண்டும். அப்பால், அவன் கவலையற்று மார்பில் கையை வைத்துக் கொண்டு தூங்கலாம்”......... “பிராமணர்களுடைய சேவை முக்கியமானது. அரசன், அவர்களைக் கோட்டைகளுக்குத் தலைவர்களாகவும், படையின் தண்டநாயகர்களாகவும், மஹாஸாமந்தர்களாகவும் நியமித்தல்வேண்டும்” என்று அவர் “ஆமுக்த மால்யதா”வில் கூறியிருக்கிறார்.

அவ்விதம் செய்யவேண்டும் என்பதற்கு அவர் கூறும் காரணம் பின் வருமாறு:—“உன்னுடைய படைத் தலைமையை நீ நன்றாக அறிந்த பிராமணனுக்குக் கொடு. அவனுடைய படைவலிமையைக் குறைக்காதே. எதிரிகளின் பயத்தை அறவே நீக்கித் தன் காரியங்களை நன்றாகப் பார்ப்பதற்கு அவன் படைவலிமையைப் போதிய அளவு அளிக்கவேண்டும்....... ஏனென்றால் பிராமணன் அபாயம் ஏற்பட்ட காலங்களில் இருந்த இடத்தை விட்டு நகராமல் வேலையைச் செம்மையாகச் செய்வான். அன்றி க்ஷத்திரியனுக்கோ சூத்திரனுக்கோ கீழ்ப்பட்டு வேலை செய்ய நேரிட்டாலும் அவன் வேலையை விட்டு விடமாட்டான்.”

இவ்விதம் விஜயநகர ஸாம்ராஜ்யத்திலும் மஹாராஷ்டிர ஸாம்ராஜ்யத்திலும் கோட்டைக் காவலர்களாக இருந்து அரசாங்கத்துக்குத் தொண்டாற்றிய பிராமணர்கள் பலரைச் சரித்திரம் அறியும்.

(இந்தத் தொடர்ச்சியில் முந்திய கட்டுரை சென்ற வார இதழில் பிரசுரமாகியது)

[காப்பிரைட்]

[சங்கீத ரத்னுகர அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியது.]

I

பல்லவி

ப்ரோவ வம்ம! தாம ஸமேலே
தேவி! தாளலேனே பிரான

அனுபல்லவி

நீ வனுதரண ஜேஸிதே நிர்வஹிம்ப வசமா காமாக்ஷி!

சரணம்

1. தீனரக்ஷகி நீவேயனி திவ்யமைன நீ நாமமே
த்யானமு வேரே மந்த்ர ஜப தப முலெருகனே பிரான
2. ஜாலமேல? விநோதமா? சிவ சங்கரி! நீ ஸமானமா
சூலினி! வேரே பக்த பரிபாலினிகா தா! பிராண
3. ச்யாம கிருஷ்ண ஸோதரி! சுகச்யாமளே! த்ரிபுர [ஸுந்தரி!
ஈ மஹிலோ நீஸமான தைவம் எந்து கானனே காமாக்ஷி

II

அம்ம பிரான ப்ரோவ தாமஸமு ஏல—அம்மா சீக்கிரமாகக் காப்பாற்றத் தாமதமேன்?

தேவி! தாளலேனே!—தேவி! தாங்க முடியாதே!

காமாக்ஷி! நீவு அனுதரண ஜேஸிதே நிர் வஹிம்ப வசமா?—காமாக்ஷி! நீ என்னை ஆதரிக்கா விடில், என்னுல் நிர்வகிக்க [முடியுமா?

தீனரக்ஷகி நீவே அனி—தீனர்களை ரக்ஷிக்கிறவள் நீயே என்று

திவ்யமைன நீ நாமமே த்யானமு—திவ்யமான உன் திரு நாமமே நான் தியானிக்கும் பொருள்

வேரே மந்த்ர ஜபதபமுல் எருகனே—வேறு மந்திரங்களின் ஜபத்தையாவது, தீவத்தையாவது அறியேன்! (பிரானப்ரோவ)

ஜாலமு ஏல? விநோதமா?—இந்த ஜாலம் ஏன்? உனக்கு [இது விளையாட்டா?

சிவ சங்கரி! நீஸ மானமா—மஹா தேவனுடைய பார்யையே! [உனக்கு யார் ஸமானம்?

சூலினி நீவே பக்த பரிபாலினி காதா—சூலினி! நீயே பக்தர்களைப் பரிபாலிப்பவள் அல்லவா? (பிரான்-ப்ரோவ)

ச்யாம கிருஷ்ண ஸோதரி! சுக ச்யாமளே! த்ரிபுரஸுந்தரி!—ச்யாம கிருஷ்ணனுடைய ஸஹோதரியே! சுகச்யாமளே! த்ரிபுர ஸுந்தரி!

காமாக்ஷி! ஈமஹிலோ நீஸமான தைவம் எந்து கானனே—காமாக்ஷி! இவ்வுலகத்தில் உனக்கு ஸமானமான தெய்வம் எங்கும் காணேன்! (பிரானப்ரோவ).

ஸ்ரீ காமாக்ஷி

[காலஞ்சென்ற கீர்த்தனுச்சார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் சரி பார்த்தது]

III

ராகம்:—மாஞ்சி

தாளம்:—சாபு

ஸம்பூர்ணம் - ஆரோஹணத்தில் சதுச்ருதி தைவதம்.
20-வது மேள கர்த்தா (நட பைரவி)வில் ஜன்யம்.

பல்லவி

1. , ரி நி ஸா ரீ | , கா ரீ ரி க | ம மா ப ர த ப மா | பா ம த ப ம . க ரீ ||
ப்ரோ . வ வம் | . மா . தா . | ம ஸ மே . . . | . லே பி . ரா . . . ||

2. ஸ – | ” ” | ம மா ப த நி த த ப ப ம | ” ” ||
ன – | ” ” | ம ஸ மே . . . . . . | ” ” ||

3. ஸ – | ” ” | ” | பா ; ; த |
ன – | ” ” | ” | லே அம் |
பா , ம நி த நீ ; நி த ஸ்ா | , நி நி த த் ப ப நி த ப | கா ; ; ம த | ப ம கா ரீ , க ரி ||
பா - தே-வி த ரு . . | . . ள - லே . . . . | னே பி - | ரா . . . னி . ||

4. ஸ– க ரீ நி ஸா ரீ | , கா ரீ ரி க | ம மா ப த நி த த ப ப ம | பா ; ; த |
. ப்ரோ . . வ வம் | . மா . தா . | ம ஸ மே . . . . . . | லே அம் |
பா த நி ஸ்ா ஸ்ா | , நீ ரி ஸ் ஸ் நி நி த த ப | ம ப த நி ஸ்ா , ஸ் நி த ப |
பா தே . வி தா | . . . . . . ள . லே . | னே . . . . |
கா ம ப கா ரீ , ம க ரி ||
. பி . ரா . . ன . ||

5. ஸ- | | | பா ; ; த பு ||
. – ப்ரோ வ வம் | மா தா | ம ஸ மே . | லே அம்ப ||
ப த நி ஸ் ரி க் ரி ஸ்ா | , நீ ரி ஸ் ஸ் நி நி த த ப | ம ப த நி ஸ் ரி க் ரி
தே . . . . . வி தா | . . . . . . ள . லே . | னே . . . .
ஸ் நி த ப ம க | ப ம த ப நி த ப ம் க ம த ப ம க ||
. . . . பி . | . . . . ரா . . . ||
ரி ஸ – { க ரீ நி ஸா ரீ | , கா ரீ ரி க | ம மா பா தா த ப மா | பா }
. ன . { ப்ரோ . . வ வம் | . மா . தா . | ம ஸ மே . . . . . | லே }

அனுபல்லவி

, பா , நி தா பா | , பா பா , நி த ப மா | பா ; ; த நீ தா நீ | ஸ்ா ; ஸ் ஸ்ா ||
நீ . வ னு | . த ர . ண . . | ஜே . . . . ஸி | தே அம் பா ||

2. , – பா , ரி ஸ் ரீ ஸ் நீ த | பா , பா , பா , நி த ப மா | பா . த நீ த நீ | ஸ்ா ; ஸ் ஸ்ா ||
. – நீ . வ . . . னு | . த ர . ண . . | ஜே . . . ஸி | தே அம் பா ||
; – த நி ஸ்ா ஸ்ா | ரி ஸ் ஸ் நி நி த . பா . த பா ; த | ம பா ; ; ம த | ப ம கா ரீ க ரி ஸ ||
நிர் வ ஹிம் | . . . . ப . வ . ச . | ம் . கா . | மா . . . க்ஷி . . ||
; – த நி ஸ்ா ரி ஸ் ரீ , ம் க் ரி | ஸ்ா , ரி நீ நி த த ப | ம ப த நி ஸ்ா , ஸ் நி த ப |
நிர் . வ . . ஹிம் . . . | . . ப வ . ச . | கா . . . . மா . . . |
கா ம த ப ம கா ரீ , ம க் ரி || ஸ .
. . . . || க்ஷி .

(ப்ரோவ)

சரணம்

, நி த நி த த ப | ப பா ; ப தா ம | பா ; ; த நி த நீ | ஸ்ா ; ; ஸ் ||
ச் யா . ம . க்ரு . | . ஷ்ண . . . | ஸோ . . த | ரி சுக் ||
; த நி ஸ்ா ரீ | ; ரி க் ம க் ரி ஸ ஸ் | நீ ; ; க் ரி | ஸ்ா ; ; நி ரி ஸ் நி த த ப ||
ச்யா . ம ளே | த்ரிபு . . . . ர | . ஸு ந் . த | ரி . அம் . . . பா . ||
; த நி ஸ்ா ஸ்ா | ஸ்ா , பா , த ம | பா , க் ரி ஸ்ா ஸ் | நீ ரி ஸ் ஸ் நி நி த த ப ||
ஈ . . ம ஹி | லோ நீ ஸ | மா . . . ன | தை . . . . வம் . . ||
; த நி ஸ்ா ஸ்ா | நீ ரி ஸ் ஸ நி நி த த பா | ம ப த நி ஸ்ா ,
எ ந் து கா | . . . . . . ன . னே . | . . . . .
ஸ் நி த ப | கா ம த ப ம கா ரீ ம க || ரி ஸ
கா . . . | மா . . . . க்ஷி . || . .

(ப்ரோவ)

மற்ற இரண்டு அடிகளையும் இதேபோல் பாடவும்.

மற்றோர் ஏகாதி பத்தியத்தின் மறைவு

★

ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன்

கொட்டு மேளத்துடன் முஸோலினி பறைசாற்றிய இத்தாலிய ஏகாதிபத்தியம் இருந்த இடத்திலே இப்பொழுது புல் முளைத்து விட்டது. தலைக்குவந்தது தலைப்பாகையுடனேயாவது போகுமாவென்பதுதான் கேள்வி. பதில் சொல்லப் பூர்வ சம்பவங்களை சிறிது ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

“ஒவ்வொரு அரசாங்கத்திலும் இரண்டு வகுப்பினர் இருக்கிறார்கள். பணக்காரர் ஒரு கோஷ்டி; ஏழைகள் மற்றொரு கோஷ்டி. கொடுங்கோலன் ஒருவரிடமிருந்து மற்றொருவரைக் காப்பாற்றுவதாகக் காட்டிக்கொள்ளவேண்டும்; முடிவில் வலுத்த கட்சியை இழுத்துக் கொள்ளவேண்டும்’ என்று கிரேக்க ஞானி அரிஸ்டோடில் வெகு காலத்துக்கு முன்பே கூறினார். எனவே பாஸிஸ்டு முறையில் புதிய அம்சம் எதுவுமில்லை. முஸோலினி அதன் கோரத்தை பெரிய வார்த்தைகளைக் கூறி மறைக்க முயன்ற போதிலும், இத்தாலிய மகாஜனங்களின் மீது சிலருடைய ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளுவதே அதன் அடிப்படையான கொள்கை.

இத்தாலிய ஜனநாயக முறையில் இருந்த ஊனமே பாஸிஸம் ஓங்குவதற்கு இடங்கொடுத்தது. ஒரு காலத்தில் ஐரோப்பாவுக்கே சிறந்த ஞானிகளையும் தேர்ந்த கவிகளையும், சமர்த்தர்களான முதலாளிகளையும் ஈன்று கொடுத்த இத்தாலி க்ஷீணிக்கவே, தாங்கள் தீழ்ப்பட்டவர்கள் என்ற உணர்ச்சி இத்தாலியர்களைக் கவ்விக் கொண்டது.

முந்திய மகா யுத்தத்துக்குப் பிறகு இத்தாலிய தொழிலாளர்கள் இயக்கம் வலுப்பெற்றது. இதனுல் புதிய சகாப்தம் ஆரம்பமாகலாமென்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனுல் தலைவர்களுக்குள் ஒற்றுமையில்லை; காரியத்தில் துணிந்து இறங்கவும் அவர்களுக்கு தைரியமேற்படவில்லை. தீவிரவாதிகள் பொதுஜனப் புரட்சியை ஏற்படுத்த விரும்பினுர்கள்; மற்றவர்கள் அதை விரும்பவில்லை.

எனினும் தொழிலாளர்கள் இயக்கம் வலுத்து வந்ததில் முதலாளிகளுக்குக் கலக்கமேற்பட்டு விட்டது. 1920-ல் தொழிலாளர்கள் வேலை ஸ்தலதிலிருந்துகொண்டே வேலைசெய்ய மறுத்தும் இவர்களைச் சமாளிப்பதற்குச்சரியான ஆளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று முதலாளிகள் கருதினுர்கள். பெனிடோ முஸோலினியைக் காட்டிலும் அந்த நாசவேலைக்குத் தகுதியானவர் யார் இருக்கக் கூடும்? பச்சோந்தியின் தன்மையினர் அவர்; பதவியில் அவருக்குப் பரமயோகம்; எல்லாம் தான் தான் என்பது அவர் அகம்பாவம். இவ்விதமாக முதலாளிகள் நிலச்சுவான்கள் இவர்களுடைய ஆதரவையும் பலத்தையும் முஸோலினி தேடிக் கொண்டார். அது ரோமாபுரிக்கு பாட்டையைக் காட்டியது.

பாஸிஸத்தால் தேசம் கதிமோக்ஷமடைந்ததா? இல்லை. ஏழ்மையிலேயே அது மூழ்கிக் கிடக்கிறது. ஜனங்களுடைய வருமானம் மிகவும் குறைவு; பண்டங்களை வாங்குவதற்கு அவர்களுக்கு அதிக சக்தி கிடையாது; இருந்தாலும் பலனில்லாத காரியங்களுக்கு அவர்கள் அதிக வரிகளைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையைத் திருத்த வழியில்லை; நீடித்திருக்கும்படி விட்டுவைப்பதும் ஆபத்தாக முடியும். பழைய ரோமாபுரியின் பெருமையை எடுத்துக்கூறி முஸோலினி ஜனங்களுக்கு ஆசையை ஊட்டினுர்.

ஹிட்லருடைய கூட்டாளியாயினும் முஸோலினி யுத்த ஆரம்பத்தில் நடுநிலைமையை வகித்தார். அது அவருக்கு லாபகரமாகவும் இருந்தது; வியாபாரம் பெருகுவதற்கும் இடமேற்பட்டது. அபிஸீனியாவில் 5 கோடி பவுன்களைக் கொட்டினுர். 2 லக்ஷம் இத்தாலிய விவசாயிகளை அங்கு குடியேற்றினுர். அடிஸ் அபாபாவைச் சுற்றி பள்ளிக்கூடங்களையும், ஆஸ்பத்திரிகளையும், மார்க்கெட்டுகளையும் ஏற்படுத்தினுர். அல்பேனியாவைச் சுரண்ட வழி தேடினுர்; ஸிஸிலியில் பரந்த பூமியை விரிந்த செலவில் பண்படுத்தினுர்.

பணம் எப்படிப் போனுலும் யுத்தத்தில் இத்தாலியை முஸோலினி மாட்டி வைக்காமலிருந்தால் போதுமென்று ஜனங்கள் நினைத்திருந்தனர். ஆனுல் பிரான்ஸை முதுகில் குத்துவதற்காக திடீரென்று ஒரு நாள் அவர் யுத்தத்தில் குதித்துவிட்டார்!

இதனுல் இத்தாலிக்கு ஏற்பட்டுள்ள கதியை சர்ச்சில் மிகு அழகாக வர்ணித்துள்ளார். அதனுடன் டியுனீஷியாவிலிருந்து எதிரிகளை வெருட்டியடித்ததும் இத்தாலி மீது தொடர்ந்து விமானத் தாக்குதலை நடத்தி அந்த நாட்டை வதம் செய்து விடுவதாகவும் அவர் பயமுறுத்தினுர். அந்த நிலைமை ஏற்படுகையில் ஸ்பெயினில் இத்தாலி செய்ததையே நேச தேசங்கள் பின்பற்றுவதாக இருக்கும். பெரிய நகரங்கள் அநேகமாக கடலோரத்தில் இருக்கின்றன; நேசதேச விமானங்கள் இஞ்சினை மூடி விட்டு சந்தடியில்லாமல் இத்தாலிய நகரங்கள் மீது குண்டுகளை வருஷிக்கலாம்.

முஸோலினிக்குப் பெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உடும்பு போனுல் போகட்டும் கையை விட்டால் போதுமென்னும் கதையாக ஏகாதிபத்தியம் போனுலும் இத்தாலியையேனும் காப்பாற்றிக்கொள்ள நேசதேசங்களுடன் சமாதானப் பேச்சு நடத்தவும் வசதியில்லை. ஹிட்லர் அதற்கு இடங்கொடுக்க மாட்டார். முஸோலினியின் கழுத்தைப் பிடித்து நெரிக்கக் கூடிய வலுத்த நிலைமையில் ஹிட்லர் இப்பொழுது அங்கு இருந்து வருகிறுர்.

உள் நாட்டுப் புரட்சி ஒரு வழியைக் காட்டிலும் பலர் அதில் நம்பிக்கையும் கொண்டிருக்கின்றனர்: ஆனுல் இவ்வளவு சிக்கிரமா அது ஏற்படுமென்று தோன்ற வில்லை, ஐரோப்பாவில் நேச தேசங்கள் காலை ஊன்றிக் கொள்ள ஆரம்பித்து விட்டால் அப்பொழுது நிலைமை மாறி விடும்.

பாஸிஸத்தில் இத்தாலியர்களுக்கு ஒன்றுமே பற்றுதல் கிடையாது. வெடி குண்டும் ஈட்டியும் அதற்குத் தாற்காலிக வெற்றியை ஏற்படுத்திக் கொடுத்தன; ஆனுல் தொழிலாளர் மனக்கொதிப்பும், எதிர்ப்பு உணர்ச்சியும் எப்போதும் போலவே இருந்து வருகின்றன. ஆசிரியர் கேதனே ஸால்வெமினி மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு தகுந்த ஆதாரங்களுடன் எழுதியிருக்கும் நூல்களைப் படித்தால் இந்த உண்மை எளிதில் புலப்படும். கொடிய அடக்குமுறை தாண்டவமாடியும் தொழிற்கட்சிக்கு ஆதரவு அங்கு எந்தச் சமயத்திலும் குறையவில்லை. அவர்கள் பழி தீர்த்துக்கொள்ளும் காலம் கிட்டத்தில் இருக்கிறது.

திட்டமான வாழ்க்கை

★

வ. ரா.

எப்பொழுதும் வருகிற நேரத்துக்கு, ரொம்பவும் முன்னுலேயே நண்பர் வந்துவிட்டார். இவ்வளவு 'சீக்கிர தரிசன'த்துக்கு, காரணம் என்ன என்று கேட்டேன். அவர் சொல்லுகிறுர்.

நண்பர்:—நாம் இருவரும் பேசிக்கொண்டிருப்பதை, எங்கள் வட்டாரத்தில் நான் போய்ச் சொல்லுவேன். சொல்லும்பொழுதெல்லாம், அவர்கள் உங்கள் பேரில் ஆத்திரப்படுகிறுர்கள்.

நான்:—அடப்பாவமே! என் பேரிலேயா? எதற்காக ஆத்திரப்பட வேண்டும்?

நண்பர்:—நம்மவர்கள் வாழ்க்கையை அடியோடு மாற்றினுலொழிய, அவர்களுக்கு விமோசனம் இல்லை என்று நீங்கள் சொல்லுவதை அவர்கள் கேட்டு, ஆத்திரப்படுகிறுர்கள். வ.ரா பிரகஸ்பதியோ என்று ஒருவன் கேட்கிறுன். அவர் திரிகால ஞானியோ என்று ஒரு ஸ்திரீ கேட்கிறுள். மனேப் பிராந்தியால் ஏதோ உளறுகிறுர் என்று இன்னெருத்தர் சாவதானமாக சொல்லுகிறுர்.

நான்:—நல்ல வேளை! நாம் பேசிக்கொண்டிருப்பது, ஒரு பயனும் இல்லாமல், காற்றடித்து வீணுகப் பறந்து போகாமல், மனிதர்களின் ஆத்திரத்தையாவது கிளப்பி விடுகிறதே, அதுவரையிலும் நல்லதுதான். ஆத்திரத்துக்கு அடுத்தபடியாக, யோசனை வந்தே தீரும்.

நண்பர்:— திட்டமான வாழ்க்கை என்று எதையெதையோ, கதைத்துக் கொண்டு போகிறுரே என்று இன்னெருத்தர் கேட்டார்.

கதைப்பதல்ல

நான்:—உயர்ந்த லக்ஷியத்துக்கும் திட்டமான வாழ்க்கைக்கும், சீரிய உணர்ச்சியும் பரந்த அறிவும் மனக் கட்டுப்பாடும் உறுதியும் வேண்டும். அவைகள் நம்மவர்களிடம் எவ்வளவு வரையில் இருக்கின்றன என்பதை ஆராய வேண்டும். அந்நியர்களோடு நம்மவர்களை ஒப்பிட்டுப் பார்த்து, உயர்வு தாழ்வுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். சரித்திரத்தின் மூலமாகவும் பரம்பரைக் கதைகளின் மூலமாகவும் பழமொழிகளின்மூலமாகவும் நம்மவர்களின் வீழ்ச்சியின் காரணங்களைச் சேகரிக்க வேண்டும். இவைகளை, நாம் இப்பொழுது ஆராய்ந்து வருகிறேம். இது கதை கதைப்பது ஆகுமா?

நண்பர்:—உங்களை எதிர்த்துப் பேசுபவர்கள் யாவரும், நம்முடைய நாகரிகத்தை, நீங்கள் தாழ்த்திப் பேசுவதாக நினைத்து ஆத்திரப்படுகிறுர்கள்.

நான்:—பண்டைக் காலத்து செல்வத்தையும் பெருமையையும் பேசிக்கொண்டிருப்பவரின் வீட்டில், சோறில்லாமல் வெறும் பானையும் கிழிசல் துணியும் கூடு மார்பு தட்டிய உடலும் குழிந்த கண்ணும் ரத்தத்துக்குப் பதிலாக, பயத்தையே கொண்டு அடித்துக்கொண்டிருக்கிற இதயமும் காக்ஷிகள் அளிக்குமானுல், பெருங்காயம் இருந்த செப்பைப் போல, பழைய பெருமையைப்பற்றி, பேசி லாபம் என்ன? சுமார் மூவாயிர வருஷத்துக்கு முன், ஹிந்துக்கள் உலகத்தையே நாகரிகப்படுத்தினுர்கள் என்பது உண்மை.

நண்பர்:—அப்படியிருக்க-

நான்:—அப்படியிருக்கி நமது பழைய வாழ்க்கை முறையையும் நாகரிகப் பண்பையும் நான் குறைத்துப் பேசலாமா என்று வெடுக்கென்று கேட்கப் பார்க்கிறீர்?

நண்பர்:—ஆமாம்!

நான்:—நீர் பச்சைக் குழந்தை. "எங்கள் நாகரிகம்ப்பழம் பெரு நாகரிகம். எங்கள் நாட்டின் பேரில், நீங்கள் ஆக்கிரமிப்பு எண்ணத்தை வைத்துக் கொள்ளலாகாது" என்று ஹிட்லரிடமும் டோஜோவிடமும் சொல்லிப் பாரும். 'ஆடை என்பது என்ன என்று உங்களுக்குத் தெரியாது. காலத்திலேயிருந்தே, ஹிந்துக்களாகிய நாங்கள் ஆடை உடுத்தி, அணிகலன் அணிந்து, கீதம் நுகர்ந்து, இன்பத்திலாழ்ந்து, பெரு வாழ்வு வாழ்ந்து வந்தோம்' என்று இந்திய மந்திரி அமெரி பெரியாரிடம் சொல்லிப் பாரும். மூவரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். 'யாரடா! பைத்தியத்தை உள்ளே விட்டது' என்பார்கள்.

நண்பர்(ஆத்திரத்தோடு):- அப்படிச் சொன்னுல் அவர்கள் தான் முழுப் பைத்தியங்கள்!



மல்லிக் ஸ்நான கட்டம்

மல்லிக் ஸ்நான கட்டம் ஹுக்லி நதிக்கரைகளில் பிரதி தினமும் ஸ்நானம் செய்யப்போகும் ஆயிரக்கணக்கான ஜனங்களின் மனதிற்கு ரொம்பப் பிடித்தமான ஒரு ஸ்தலமாகும்.



ஹமாம் ஸோப்பின் புது வடிவத்தைக் கவனிக்கவும்.

அதுபோலவேதான் இந்தியாவில் எங்கும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் தங்கள் தினசரி ஸ்நானத்திற்கு ஹமாம் ஸோப்பையே ப்ரீதியுடன் உபயோகித்து வருகின்றனர். ஏனெனில் ஹமாம் அவ்வளவு குளிர்ச்சியானதும் உற்சாக மூட்டுவதுமான ஸோப்பேயாம்.

டாம்கோ விற்பனை இலாகா,
நெ. 1, வாரன் ரோட், பீமன்பேட்,
மைலாப்பூர் — மதராஸ்.

ஹமாம்
உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

TS. 2985.

சொர்ப்பன உலகம் வேண்டாம்

நான்:-பேஷ்! நீர் சொர்ப்பன உலகில் நடப்பதை, நிஜம் என்று கொண்டு, சந்தோஷப்படுகிற பேர்வழியா? வியவகார உலகத்தில், தற்போது நடக்கிற சங்கதியைப் பற்றி உமக்கு கவலையே இல்லைபோலிருக்கு!

நண்பர்:-என்ன, அப்படி படீர் என்று அடிக்கிறீர்களே!

நான்:-இந்த தேசத்தில், சுமார் ஆயிரம் வருஷங்களாக, ஹிந்துக்கள் முன்யோசனையும் திட்டமும் இல்லாமல், தன்தலையாட்டமாக வாழ்ந்து வந்தார்கள். அதன் பயன் என்ன? இப்பொழுது நமது மகான்கள் சிறையில் வாடுகின்றுர்கள். நமது மேதாவிகளின் புத்தி சாதுர்யத்துக்கு மதிப்பு கிடையாது. நம்மவர்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற அவச் சொல்லை, வாங்கி மடியில் கட்டிக் கொண்டிருக்கிறுர்கள். தேசத்திலிருக்கும் பெரும்பான்மை மக்களுக்கு, வயிறு முட்ட ஆகாரம் கிடைப்பதில்லை. தேக முழுதும் மறையும்படியாக உடை கிடைப்பதில்லை. சிறிய இன்பம் அனுபவிப்பதற்குக்கூட அவர்களுக்கு பொழுதும் பணமும் மனமும் கிடையாது.

நண்பர்:— இவ்வளவும் உண்மை. அந்நியன் வெறும் சிப்பாயாக இருந்தால்கூட, அவன், நமது மகாத்மா காந்தியைவிட உயர்ந்தவன் என்ற இறுமாப்போடு நடக்கிறுன். இதை நினைக்கும் பொழுதெல்லாம், ரோஷம் தான் உண்டாகின்றது.

நான்:—இந்த மாதிரி ரோஷம் வருவது இயற்கைதானே? இப்படி ரோஷம் வந்தால் தானே, நம்மவர்கள் அநியாயத்தோடு போர் புரிந்து, பெருமக்களாக வாழ முடியும்?

நண்பர்:—முற்றிலும் உண்மை. ரோஷம் இல்லாதவன் மனிதனு?

நான்:—உம்முடைய ஆத்திரத்தை மெச்சினேன். ஆனுல், ஒன்று சொல்லுகிறேன், கேளும். ஒரு இடத்தில், அநியாயத்தை நீர் பார்க்கிறீர். பார்த்ததை, நீர் உம்முடைய பாட்டனுரிடம் சொல்லுவதாக வைத்துக் கொள்ளும். அப்பொழுது என்ன நடக்கும் தெரியுமா?

நண்பர்:-என்ன நடக்கும்?

பூர்வ ஜன்ம பலன்

நான்:—உமது தாத்தா ஜபமாலையை உருட்டிக் கொண்டே உம்மிடம் பேசுவார். (இரண்டும் எப்படி சாத்தியமோ, அது எனக்குத் தெரியாது) உம்மைப் பார்த்து, 'அப்பா! பிள்ளையாண்டான்', என்று ஆரம்பிப்பார்.

நண்பர்:—வர்ணிக்கத் துவக்கி விட்டீர்களே!

நான்:-கேளும்! 'அப்பா, பிள்ளையாண்டான்! இளங்கன்று பயமறியாது. அநியாயம் என்று நீ சொல்றே. அது அப்படியில்லே! இதெல்லாம் பூர்வ ஜன்மாந்திர பலன். அவன் அடிக்கணும்னு இருக்கு; இவன் அடிபடணும்னு இருக்கு. அதுக்காக நீயும் நானும் என்ன பண்ண முடியும்? அவனவன் கர்மத்தின் பலனை அவனவன் அனுபவித்துத்தான் தீரணும்.

நண்பர்:- பாட்டன்மார்கள் இந்த மாதிரி சொல்லி நான் கேட்டிருக்கிறேன்.

நான்:—தாத்தா, இப்படிச் சொன்னுல், உம்முடைய ரோஷமும் அநியாயத்தில் ஆத்திரமும், அநியாயத்தை அடியோடு அழிக்க வேண்டும் என்ற தீர்மானமும் எங்கே இருக்கும்? வந்த வழியைப் பார்த்துக்கொண்டு, சொல்லிக் கொள்ளாமலே போகும்.

நண்பர் பெருமூச்சுவிட்டார். காரணம் தெரியவில்லை.

நான்:—ஏன் பெருமூச்சு விடுகிறீர்? தாத்தா சொன்னதைக் கேட்டாயிற்று. பக்கத்திலிருக்கும் பாட்டி சொல்லுவதைக் கேளும். 'ஏண்டா! கவலையில்லாமல் சாப்பிடறயே. அதனுலே திமிர் பிடிச்சுப் போச்சா? உனக்கென்ன, ஊர்வம்பு வேண்டியிருக்கு? உடம்பு நெளிவு இடுக்கிறதோ? ஊர் வம்பிலே மாட்டிண்டயோ, தோலை பதப்படுத்தி விடுவான்கள்' என்று பாட்டி சொல்லுவதைக் கேட்டிருக்கிறீரா?

நண்பர்:—நன்ருய் கேட்டிருக்கிறேன்.

நீர்த்துப் போகும் வுக்க

நான்:—ரோஷ உணர்ச்சி இயற்கையானது என்றும் அதன் மூலமாகத்தான் தனி மனிதனும் ஒரு சமாஜமும் முன்னேற முடியும் என்பதையும் நீர் ஒப்புக்கொண்டிருக்கிறீர். அந்த ரோஷ உணர்ச்சி, படுகிறபாட்டை, நீர் இப்பொழுது பார்க்கிறீரா? தாத்தா, கர்ம பலன் என்ற பரலோக தத்துவத்தைக் காட்டி, ரோஷத்தை அமிழ்த்திவிடுகிறுர். தோல் போய்விடும் என்ற இகலோக காரணத்தைக் காட்டி, பாட்டி, ரோஷம் இருந்த இடத்தில், பயத்தை பிரதிஷ்டை செய்து விடுகிறுள்.

நண்பர்:—மோசமானதுதான்.

நான்:—உன்னதமான உணர்ச்சியோடு, வீட்டுக்கு வருகிற அறியாப்பிள்ளையை, இரண்டுபேரும் சேர்ந்து இப்படிச் செய்துவிட்டால், அவனுடைய லக்ஷியம் மண்ணுய்ப்போய்விடும்; அவனுடைய உணர்ச்சி நீர்த்துப் போகும். பிறகு, அவன் தைரியத்தையும் சமூக சேவையையும் பற்றிப் பேசவே மாட்டான். என்ன யுக்தி செய்தால், தான் அவகேட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்பதுதான் அவனுடைய சதாகால நினைப்பாக இருக்க முடியும்.

நண்பர்:—உன்னத லக்ஷியமும் இயற்கையான உணர்ச்சியும் சூக்ஷ்மமாக பாழடைந்து போகும் வழி இதுதான். தைரியத்தையும் தியாகத்தையும் தூண்டுவது கஷ்டம்; பயத்தையும் சுயநலத்தையும் ஒரு விநாடியில் கிளப்பி விட்டுவிட முடியும்.

நான்:—'அப்பா குழந்தை! எங்கே அநியாயத்தைப்பார்த்தாலும், அதைச் சும்மா பார்த்துக்கொண்டு, இருக்காதே. நியாயத்துக்காக போராடு. கஷ்டம் வந்தாலும் பாதகமில்லை' என்று தைரியம் சொல்ல வேண்டிய பெரியவர்கள், 'தொட்டால் சுருங்கி' வேலையைச் செய்வதாய் இருந்தால், நாட்டார், எப்படி, சுதந்திரர்களாகவும் சுகவாசிகளாகவும் இருக்க முடியும்!

நண்பர்:—ஆமாம்!

நான்:—இன்னென்றைப் பாரும். ஒன்றிரண்டு பேர்களைத் தவிர, நம்மவர்கள் எல்லோருக்கும் பணத்தில் ஆசை, சுகத்தில் ஆசை, அதிகாரத்தில் ஆசை. இவ்வளவு ஆசையை உள்ளுக்குள் வைத்துக்கொண்டு, திருப்தி என்ற மாயப் போர்வையைக் கொண்டு, அதை மறைக்கப் பார்த்தால், அது முடிந்த காரியமா? ஆசை என்பது துளிகூட இருக்கப்படாத வாழ்க்கையிலிருந்து, ஆசை உள்ளத்தில் நிரம்பிக் கிடக்கும் வாழ்க்கைக்கு தங்களை அறியாமலே நம்மவர்கள் மாறிவிட்டார்கள்.

நண்பர்:- அது என்னமோ, உண்மைதான்.

ஆஷாடபூதி வாழ்க்கை

நான்:—பங்களா, மோட்டார், நல்ல உடை, சுகந்த வாசனைகள், ஆனந்தமான உணவு, அழகான நாடகம், கண்ணைக்கவரும் சித்திரம், மெய்மறக்கச் செய்யும் சங்கீதம், இனிப்பான சம்பாஷணை விலாத்தெறிக்கும்படியான சிரிப்பு, இவைகளில் எல்லாருக்கும் தவிர்க்க முடியாத பிரேமை இருக்கிறது! அதாவது குதூகலமான வாழ்க்கையிலே, நம்மவர்களின் மனம் இப்பொழுது செல்லுகிறது. செல்லுவது நியாயம் தான்.

நண்பர்:—சரி; அப்படியானுல்—?

நான்:-அப்படியானுல் என்று கேட்கிறீரோ? அப்படியானுல் வாழ்க்கையின் பழைய சுவட்டை விட்டுவிட்டு, புதிய சுவட்டில் நம்மவர்கள் வாழ்க்கையை செலுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் திருப்தி, கர்ம பலன் என்ற போர்வைக்குள் கொள்ளை ஆசையை அடக்கிக்கொண்டு வாழ்ந்தால் அது ஆஷாடபூதி வாழ்வு ஆகும். அது சத்தியத்துக்கு பாதகம் செய்வதாகும். அது வாழ்க்கை குமுறுதலை அடக்கி, உயிரையும் உணர்ச்சியையும் ஏய்த்து, வஞ்சிப்பதாக முடியும்.

நண்பர்:—அப்படியா?

நான்:-அந்த நிலைமைக்குத் தான், நம்மவர்கள் இப்பொழுது வந்திருக்கிறுர்கள். வாழ்க்கையை ஏய்க்கப் பார்க்கும் வித்தையைப் பழகி, நம்மவர்கள் சாசுவத அடிமைகளாக வாழ வேண்டுமா? தயை செய்து, சொல்லும்.

அட்டைப் படத்தில் யார் ?

★

தமிழ் நாடு டாக்கீஸாரின் 'சேஞ்சு லட்சுமி' என்ற தெலுங்குப் படத்தில் தோன்றும் கமலா கோட்னிஸ்

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி, உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

வஞ்சமா? வஞ்சகமா?

"நியாயவாதி"

"ஏடு மூஞ்சி" என்று சிலர் என்னை இகழ்கின்றனர். வேறு சிலர் என்னை "பேசா மடந்தையின் புருஷ அவதாரம்" என்று அழைக்கத் தலைப்படுகின்றனர். மற்றும் சிலர், என்னைச் சுட்டிக் காட்டி, "முகத்தையும் பிறரது சல்லாபத்தையும் வெறுக்கும் இவனது வாழ்க்கையில் ஏதோ பயங்கரமான இரகசியம் இருக்கிறது. இவன் ஏதோ குற்றத்தைச் செய்துவிட்டு அதை மறைக்கிறான்!" என்று கூறுகின்றனர்.

பிறரது பேச்சுகளும் ஏச்சுகளும் ஒருபுறமிருக்கட்டும். அடிக்கடி நான் என்னையே வெறுத்துக் கொள்ளுகின்றேன். துன்பத்தையே அனுபவிக்க வேண்டுமென்றும் என்று எனக்கு விதிக்கப்பட்ட விதியையும் வெறுக்கிறேன். என்னுடைய பயங்கரமான அனுபவத்தைப் இங்கு குறிப்பிடப் போகிறேன். அதைப் படிப்பவர்களுக்கு வாழ்க்கை எனக்கு எப்படி கசந்து விட்டது வென்பது விளங்கும்.

1

எனது தாய் பட்டாளத்திலுள்ள ஒரு ஜமேதாரது மகள். எனது தந்தைக்கு சிப்பாய் உத்தியோகம். ஆஜானுபாகுவாயிருந்த அவன் மீது அவளது பொல்லாதவிதியே அவனை பிரேமை கொள்ளும்படி செய்தது போலும். இருவருக்கும் விவாகம் நடந்தது. அவர்களது தாம்பத்ய வாழ்க்கை இனிது நடைபெறும் என்று எல்லாரும் எதிர் பார்த்தார்கள்.

ஆனால் ஆரம்பத்திலிருந்தே அவர்களிடை சண்டையும் சச்சரவுந் தான் வளரலாயின. என் தந்தை குடிகேடன். மூர்க்க வெறிகொண்ட மூடன். மனைவி வீட்டுக்கு வந்த மறு நாளே அவன் அவளை ஹிம்ஸிக்க ஆரம்பித்தான். அவளிடமுள்ளவற்றை எல்லாம் பிடுங்கிக் கொண்டு அவற்றை விற்று மது பானம் செய்து விடுவான். என் தாயினிடமுள்ள நகைகள், எல்லாம் இப்படி விரயமாயின. அவளிடம் தாலிச் சரட்டைத் தவிர வேறு ஒரு ஆபரணமும் இல்லாமல் அடித்துவிட்டான் மகானுபாவன்!

இத்தகைய குடிகேடனுக்கு மகனாய் பிறப்பதற்கு நான் எவ்வளவோ பாபம் செய்திருக்க வேண்டும்? என்னால் என் தாயின் கஷ்டங்கள் அதிகரித்தனவேயன்றி குறையவில்லை. துன்மார்க்கனான என் தந்தையும் அவளுடன் என்னையும் அடிப்பான், திட்டுவான் குடிவெறியில் அவன் செய்த ஆர்ப்பாட்டங்கள் எங்களுக்கு சகஜமாய் விட்டன.

சிறு வயதிலேயே நான் இந்த நகரத்திலிருந்து தப்பி வேறொரு உலகத்துக்குப் போயிருப்பேன். என் அன்னையின் அன்பும் போஷணையுமே என்னை இடைவிடாது காக்கும் ஜீவாதாரங்களாய் இருந்தன. என்னப்பனுக்குத் தெரியாமல் அவள் சேமித்து வைத்திருந்த பொருள்களைக்கொண்டு அவள் என்னைக் காப்பாற்றி வந்தாள். சகிக்க முடியாத துன்பங்களையும் என் பொருட்டு அவள் சகித்து வந்தாள் என்றுசொல்லவேண்டும்.

எனக்கு பத்து வயது இருக்கும். அதுவரையில் எப்படியோ என் தந்தை தனது உத்தியோகத்துக்கு யாதொரு பழுதுமில்லாமல் நடந்து வந்தான். ஆனால் குடிகெடுக்கும் குடி அவனது புத்தி மாருட்டத்தை அதிகரித்தது. குடி வெறியுடனிருந்த அவன் ஒருநாள் ஏதோ தவறைச் செய்துவிட்டான் என்றகாரணத்துக்காக அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

அன்றிரவு வீட்டில் அல்லோல கல்லோலம். என் தந்தை சம்பளத்தை எடுத்துக்கொண்டு போய் கள்ளுக்கடையில் சமர்ப்பித்து விட்டு குடிவெறியுடன் நடுநிசிக்கு வீட்டுக்குத் திரும்பினான்.

விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது. என் தாய் படுத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் தூங்கவில்லை. அவளுக்கு அருகே நான் படுத்துக்கொண்டிருந்தேன். நானும் தூங்கவில்லை. என் அப்பன் திரும்பி வந்து ஆடிப்பாடி ஓயும் வரையில் எங்களுக்கு ஓய்வேது? ஒழிவேது?

குடி மயக்கத்துடன் பிதற்றிக்கொண்டு வந்த அவன் நாங்கள் படுத்திருப்பதைக் கண்ணுற்று கடுஞ்சினங் கொண்டான். எங்களை கண்டபடி திட்டினான். "மூதேவிகளா எனக்கு வேலை போயிற்று. உங்களுக்கோ விசாரமில்லை. சோறு எங்கே?" என்றான்.

என் தாய் நிதானமாய் "வீட்டில் ஒரு குன்றுமணிகூட அரிசி இல்லை. சோறு எப்படி வரும்? குழந்தைகூட பட்டினி" என்றாள்.

என் அப்பனுக்கு கோபாவேசம் தலைக்கேறிவிட்டது. "குழந்தையாமே குழந்தை! அவன் பட்டினியா? இதோ இந்தத் தடியால் அவனுக்கு உணவு கொடுக்கிறேன்" என்று கூறிக்கொண்டே என் மண்டையில் அதனால் அடிக்க ஓங்கினான். என் தாய் தடுக்கு முன் அது என் மண்டையில் விழுந்துவிட்டது. அவ்வளவு தான் எனக்குத் தெரியும்? நான் மூர்ச்சையாய்விட்டேன்.

2

மறுநாள் காலை அந்த அறையில் போலீசார் பிரவேசித்த பொழுது அவர்கள் கண்ட பயங்கர காட்சி இது தான்.

என் தந்தை ஒரு நாற்காலியில் சாய்ந்து கிடந்தான். அவனுக்கு ஸ்மரணை இல்லை. குடிவெறியில் கிடந்தான். அவன்

பதினொரு மணிக்கு

இப்பொழுது மணி பதினொன்று. காலை வேளைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்தமினிது" என்றார் ஒரு கவி, ஆனால் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ

அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 157

இந்திய தேயிலைகளுள் சிறந்தது.

உத்வேகமளிப்பது
புத்துயிரூட்டுவது.

ஜகூஜா, வெள்ளை லேபிள் & தேயிலை பெண்

LTK 32B

கையில் ஒரு துப்பாக்கி யிருந்தது. அதில் வெடிக்கப்பட்ட குண்டுகள் இரண்டும் தரையில் கிடந்த எனது தாயின் மண்டையில் ஊடுருவியிருந்தன. அவள் உயிருடன் இல்லை: அவளது சடலம் தான் உதிர வெள்ளத்தில் காணப்பட்டது.

மற்றொரு மூலையில் கிடந்த எனக்கு சரியான ஸ்மரணை இல்லை, எனக்கு மண்டையில் பலத்த காயம். ரத்தம் தரையில் ஓடியிருந்தது. அந்த நிலைமையில் என்னால் பேசவும் சக்தியில்லை. இதை யுணர்ந்த போலீசார் என்னை சர்க்கார் ஆஸ்பத்திரிக்காக சிகிச்சை பெற அனுப்பினர்.

என் தந்தை என் தாயைக் கொலை செய்துவிட்டான் என்று நிச்சயம் செய்ய முடிவான ருஜுக்கள் இருந்தன. அவன் குடியன் என்பதும் எப்பொழுதும் மனைவியுடன் சண்டையிடுவான் என்பதும் யாருமறிந்த விஷயங்கள். அன்றிரவு அவன் என்னை அடித்துவிட்டு என் தாயை தனது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டான் என்று போலீஸார் முடிவு செய்ததில் யாதொரு வியப்பும் இல்லை. ஆனால் என்னப்பன், தான் நிரபராதி என்று சாதித்து வந்தான். "என் பிள்ளையை அடித்த பிறகு எனக்கு மயக்கம் வந்துவிட்டது. நாற்காலியில் சாய்ந்து விட்டேன். அப்புறம் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. நினைவுடன் நான் என் மனைவியைச் சுடவில்லை" என்று அவன் சத்தியம் செய்தான்.

மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் என் தந்தைமீது தொடரப்பட்ட கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. எள்ளுப் போட்டால் எள் விழாது என்று சொல்வார்களே! அவ்வளவுக் கூட்டம். தாயைக் கொன்ற தந்தைக்கு விரோதமாய் சாக்ஷி கூறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்பட்ட கெட்ட விதியினனான சிறுவனை அனுதாபத்துடன் நோக்காதவர்கள் யாருமில்லை.

சாக்ஷிக் கூண்டில் நான் நின்ற பொழுது நிசப்தம் நிலை பெற்றது. மண்டையில் கட்டுடன் நின்ற என்னை மாஜிஸ்டிரேட் இரக்கம் நிரம்பிய பார்வையுடன் நோக்கினார். "அப்பா! உன்னை இந்த கைதி அடித்தது வாஸ்தவந்தானே?" என்றார்.

"ஆம்" என்றேன்.

"அப்புறம்,"

"எனக்கு நினைவு தப்பி விட்டது."

"பின்பு எப்பொழுது நினைவு வந்தது."

"ராத்திரி மணி இரண்டடித்தது. நான் விழித்துக் கொண்டேன்"

"அப்பொழுது நீ பார்த்தது என்ன?"

"நான் சொல்ல மாட்டேன்."

மாஜிஸ்டிரேட்டும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் என்னை பல தடவைகள் வற்புறுத்திக் கேட்டனர். நான் வாயைத் திறக்கவில்லை.

கோர்ட்டிலுள்ளவர்கள் குசுகுசு வென்று பேசுவது என் காதில் விழுந்தது. "என்ன இருந்தாலும் சொந்த அப்பனல்லவா? அவனுக்கு விரோதமாய் மகன் சாக்ஷி கூறுவனா? என்று அவர்கள் அனுதாபங் கொண்டதை உணர்ந்து நான் எனக்குள்ளே சிரித்தேன். பேதைகள்! அறிவிலிகள்! அவர்களுக்கு உண்மை எப்படி புலப்படலாகும்?

3

ஒரு வாரத்துக்குப் பின் நான் என் தந்தை அடைபட்டுக் கிடந்த, இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அவனைத் தனியாய் சந்திக்க எனக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

என்னைக் கண்டதும் அலறிக் கொண்டே என்னிடம் ஓடி வந்தான் அவன். "குழந்தாய்! உன் கௌரவத்தை நீ காப்பாற்றிக் கொண்டாயே! உன்னைப்பெற்ற என் பெருமையே பெருமை! அப்பனுக்கு விரோதமாய் சாக்ஷி சொல்ல மறுத்து விட்டாயே! என் கண்மணியே?" என்று கொஞ்சினான்.

அவனை அருவெறுப்புடன் நோக்கிய வண்ணம் ஒதுங்கிய நான் "கிட்டே வராதே அப்பா நீ? போதும்! உன் சீராட்டம் எனக்கு வேண்டாம்" என்றேன்.

"ஏனப்பா அப்படி கோபித்துக் கொள்கிறாய்? அடுத்த வாரம் செஷன்ஸ் கோர்ட்டில் என் மீது வழக்கு ஆரம்பமாகப் போகிறதே? நீ யல்லவா என்னைக் காப்பாற்ற வேண்டும்?" என்று அழுதான்.

"ஆமாம்! மாஜிஸ்டிரேட் என்னை விசாரிக்கும்பொழுது நல்ல நினைவு இல்லை. பிறகு அந்தபயங்கரமான இரவு நடந்த சம்பவங்கள் எல்லாம் வருகின்றன" என்றேன்.

"அப்படியா! அவை என்னவென்று கூறேன்."

"சொல்கிறேன் கேள்! நீ என்னை மண்டையில் தடியால் அடித்த பின் நான் நினைவுதப்பி விழுந்து விட்டேன் அல்லவா? அப்புறம் எனக்கு நினைவு வந்த பொழுது கடியாரத்தில் மணி இரண்டு அடித்தது. அப்பொழுது நீ நாற்காலியில் சாய்ந்திருந்தாய். அம்மா தரையில் கிடந்தாள்.

"சரிதான்"

"அவள் எழுந்திருந்து என்னை கவனித்தாள். நான் கண்ணை மூடிக்கொண்டே பேச்சுமூச்சில்லாமல் கிடந்தேன். என்னைப் பார்த்துவிட்டு அழுதாள்; நான் இறந்துவிட்டேன் என்று நினைத்தாள்போலும்"

"உம்! அப்புறம்"

"அவள் உன்னை ஆக்ரோஷத்துடன் பார்த்தாள். என்னை நீ கொலை செய்துவிட்டதாய் அவள் எண்ணினாள் என்பதை நான் உணர்ந்தேன். மறு நிமிடம் அவள் மேஜைக்குள்ளிருந்த உன் துப்பாக்கியை எடுத்தாள். ஜமேதாரின் மகளல்லவா அவள். அவளுக்குத் துப்பாக்கியை உபயோகிக்க நன்கு தெரியுமன்றோ" மூச்சுவிடுவது தெரியாமல் என்னப்பன் என் வாயையே நோக்கிக்கொண்டிருந்தான்.

"துப்பாக்கியை அவள் உன் கையில் வைத்தாள். அவள் உத்தேசம் என்னவென்பதை ஊகித்த எனக்கு 'அம்மா சபாஷ்' என்று கூச்சலிட வேண்டும் என்று ஆவல் உண்டாயிற்று. ஆனால் அதை கஷ்டத்துடன் அடக்கிக்கொண்டேன். அவள் உன் கையில் துப்பாக்கியை வைத்து குடி வெறியில் இருந்த உன் முகத்தின் மீது சுட உத்தேசித்தாள் என்று நான் எண்ணினேன்! ஆமாம் அப்படி செய்தால் என்னையும் அவளையும் பிடித்த பொல்லாத பீடை நீங்கிவிடும் என்று நான் எண்ணி உள்ளங் களித்தேன். போலீசார் அதை தற்கொலையென்றே நினைப்பார்கள் என்பதை யுணர்ந்தபின் என் சந்தோஷத்துக்கு ஒரு எல்லையில்லை"

என் தந்தை வியப்புடன் "அப்படியா சமாசாரம்" என்றான்.

நான், ஆம்! ஆனால் நான் எதிர்பார்த்தது கொடிய ஏமாற்றத்தில் முடிந்தது. என் அன்னை என்ன செய்தாள் தெரியுமா? துப்பாக்கியை உன் கையில் வைத்துவிட்டு அதன் குழாயை தன் முகத்துக்கெதிரே திருப்பிக்கொண்டாள். பிறகு விசையை உன் விரலால் அழுத்தினாள். 'டப்' என்று சப்தம் கேட்டது. 'அம்மா' என்ன செய்தாய்? என்று அலறினேன். அப்புறம் எனக்கு ஞாபகம் இல்லை" என்று முடித்தேன்.

என் தந்தை எழுந்து பரபரப்புடன் என்முன் விழுந்தான். "குழந்தாய்! உன் தாய் என்ன கொடிய நாடகம் ஆடிவிட்டுப் போய்விட்டாள் பார்த்தாயா? தூக்கு மேடையில் நான் தொங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இப்படி வஞ்சக ஏற்பாடு செய்து விட்டாளே! தான் செத்தும் அல்லாமல் நானும் அவளைப் பின்பற்ற வேண்டும் என்று இப்படி பண்ணிவிட்டுப் போனாளே பாபி! என்னருமைக் குழந்தாய்! நீ தான் என்னுயிரைக் காக்க வேண்டும்! சற்புத்திரன் என்ற பெயரை நீ நிலை நாட்டிக் கொள்ள வேண்டும்" என்று கெஞ்சியவண்ணம் என் காலில் விழுந்தான்.

"ஆகட்டும்" அப்பா.

"இனிமேல்" சும்மா இருக்கக் கூடாது. வாஸ்தவத்தில் நானே தான் குடிவெறியில் அவளைக் கொன்றிருக்கக்கூடும் என்று நான் இதுவரையில் நினைத்திருந்தேன்! விஷயம் இப்படியா? அப்பா! என் கண்மணியே! செஷன்ஸ் கோர்ட்டில் நீ உண்மையைக் கூறவேண்டும். என் உயிரை மீட்பது உன் கையில்தான் இருக்கிறது. என்ன சொல்லுகிறாய்? செஷன்ஸ் கோர்ட்டில் நடந்ததெல்லாவற்றையும் உள்ளபடி சொல்லுகிறாயா?"

"அப்படியே சொல்லுகிறேன் அப்பா! நீ கவலைப்படாதே."

என் பிதா துள்ளிக் குதித்தான்! ஆடினான்! பாடினான்! அவன் குதூகலத்துக்கு ஒரு எல்லை இல்லை!

4

செஷன்ஸ் விசாரணைக்கு இரண்டு நாள் முந்திதான் என் தகப்பன் தரப்பில் ஆஜரான நியாயவாதி என்னைக்காண வந்தார். என் முதுகை பெருமையுடன் தட்டிய அவர் என்ன அப்பா! நீ மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மறதியாய் இருந்ததைப்போல் செஷன்ஸ் விசாரணையிலும் இருக்கமாட்டாயே! என்று வினவினார்.

நான் அவரை வியப்புடன் நோக்கினேன். எதைப்பற்றி எனக்கு ஞாபகமறதி?" என்றேன்.

வழக்கறிஞர், "உன் தாய் குடி மயக்கத்தில் நாற்காலியில் சாய்ந்திருந்த உன் தகப்பன் கையில் அவனது துப்பாக்கியை வைத்துவிட்டு அதன் குழாயை தன் முகத்துக்கு எதிரே நீட்டி அதன் விசையை அவனது விரலைக்கொண்டு அழுத்தினதை இனிமேல் மறக்கமாட்டாயே?" என்று சொல்லிக்கொண்டே புன்னகை செய்தார்.

நான் என் கண்களைக் கசக்கிக்கொண்டே "நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே?" என்றேன்.

நியாயவாதி என் அப்பா! இதெல்லாம் நீ பார்த்தாய், சொன்னதாய் உன் தகப்பனார் சொல்லுகிறாரே! அது உண்மையானால் அவருக்கு விடுதலை நிச்சயமாயிற்றே!" என்றார்.

"என் தகப்பனுருக்கு குடி மயக்கம் அதிகம்! வெறியில் அவர் சொப்பனம் கண்டாரோ என்னமோ?" என்று சில்லிட்ட குரலில் பதில் கூறினேன்.

"அப்படியானால் இதைப் பற்றி நீ சாக்ஷிகூறப் போவது என்ன?" என்றார் அவர்.

"மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் என்ன சொன்னேனோ, அதையேதான் செஷன்ஸ் கோர்ட்டிலும் சொல்லப்போகிறேன்" என்று நான் கூறினேன்.

மறுபடியும் நான் என் தகப்பன் முன்னால் நிறுத்தப்பட்டேன். அவன் என் காலில் விழுந்தான். அழுதான், தொழுதான், கெஞ்சினான், விம்மினான். உயிர் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவனுள்ளத்தில் நம்பிக்கையை மூட்டி நான் அதை நிராசையாக்கினேனென்றால் அதை விட கொடிய ஏமாற்றம் ஒருவனுக்கு வேறு என்ன இருக்கிறது?

செஷன்ஸ் விசாரணை நடைபெற்றது. என் தந்தை மரண தண்டனை பெற்றான். என்னை சபித்துக் கொண்டே அவன் சிறைச் சாலையை நோக்கி நடந்தான். ஆனால் அதை நான் லட்சியம் செய்தால் தானே?

என் கதை முடிந்து விட்டது. எனது பயங்கர இரகசியத்தை அறிந்தவர்கள் எனது நடத்தையை எப்படி வேண்டுமானாலும் மதிக்கலாம். என் நிலைமையில் அவர்கள் ஒவ்வொருவரும் இருந்தால் எப்படி நடந்துகொண்டிருப்பார்கள்? நான் செய்தது என்ன? வஞ்சமா? அல்லது வஞ்சகமா?

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப்பலன் மாதவாரி எழுத ரூ. 3. ஆரூடம் 5 கேள்விகளுக்கு பதில் ரூ. 1. வி. பி. அணா 5.
ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி. S.I

தமிழர் வீரம்

அந்தப் பரம்பரைதானு?

★

ப. ஸ்ரீ

என்னுடைய கிராம நண்பரோடும் நகர நண்பரோடும் நான் சமீபத்தில் மகாபலிபுரம் போய் வந்தேன். போகும் வழியெல்லாம் பழைய தமிழ் நூல்களையும், முக்கியமாகச் சங்க நூல்களையும் படிக்க வேண்டிய அவசியம் குறித்தும், பழைய தமிழர் சரித்திரத்தை ஒருவாறு தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் குறித்தும் நாங்கள் பேசிக்கொண்டே போனோம். "சென்ற காலம் என்னும் திரையை நீக்கி ஒரு நாட்டின் பழைய நிலையைக் கண்டு களிப்பது நாகரிக மக்களுக்கு இயற்கையேயாகும். அது அவர்களுக்கு அவசியமும்கூட" என்று நான் வற்புறுத்தினேன். நகர நண்பரோ "நமது நாட்டில் சரித்திர ஆராய்ச்சி செய்வதற்கு விசேஷ சாதனங்கள் இல்லையே; சரித ஆராய்ச்சியிலும் கால ஆராய்ச்சியிலும் நம் முன்னோர் விருப்பம் கொள்ளவும் இல்லையே. தமிழ் நாட்டின் பழைய நிலையை உள்ளபடி காண்பதற்கு உரிய வசதிகளும் குறைவாகத்தானே யிருக்கின்றன?" என்றெல்லாம் வாதாடினார். அதில் ஓரளவு உண்மை இருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டே நான், "இப்போது இந்த நிலைமை மாறி வருகிறது. நம்மவரும் சரித ஆராய்ச்சியில் ஒருவாறு ஊக்கம் கொண்டு உழைத்து வருகிறார்கள். பழைய தமிழர் சரித்திரம் சம்பந்தப்பட்டவரை, இத்தகைய ஆராய்ச்சிக்குக் காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதையர் வெளியிட்ட சங்க நூல்களை ஒரு முக்கிய சாதனமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள்" என்றேன்.

வீர அணிகளும், முரசுகளும்

உடனே கிராம நண்பர், "இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளால் தமிழர்களது விசேஷ அருங்குணம் வீரம்தான் என்று சித்தாந்தமாகிவிட்டதென்கிறீர்கள். அப்படி வீரத்தை வளர்க்கக்கூடிய வழக்க ஒழுக்கங்கள் அந்நாளில் இருந்தனவா?" என்று கேட்டார். அதற்கு நான், "பழைய தமிழர்கள் கர்ம வீரர்களாகவும் தர்ம வீரர்களாகவும் இருந்தார்கள் என்பதைச் சங்க நூல்களில் ஓரளவு பயிற்சி உள்ளவர்களும் மறுக்கமாட்டார்கள். வீரர்களாக்கக்கூடிய வழக்க ஒழுக்கங்களும் நம்மவர்களிடையே அமைந்திருந்தன என்றும் அந்த நூல்களிலிருந்தே தெரிகிறது. உதாரணமாகப் பழைய தமிழ் அரசர்கள் கேவலம் நகைகளைச் சுமக்கும் பொம்மைகளாகக் காட்சி தரவில்லை. அவர்கள் வீரத்தைப் புலப்படுத்தும் உடைகளை அணிந்தார்கள்; வீரவளை, வீரக்கழல் முதலான வீர அணிகள் அணிந்து வந்தார்கள். எனினும் வீர அணிகளைக்காட்டிலும் தங்கள் முகத்திலும் மார்பிலும் பட்ட புண்களைச் சிறந்த அணிகளாக மதித்தார்கள். இந்த அணிகளுக்கும் மேலான வீர ஆபரணம் அவர்களுக்கு வீர மரணம்தான். அப்படி மரணம் அடைந்தவர்களின் நினைவுக் குறியாக வீரக்கல் நட்டு, அந்தக் கல்லில் வீரர் பெயரையும், அவர்களுடைய சிறந்த போர்த் தொழில்களையும் பொறித்து வைத்தார்கள். அந்தக் கற்களையும், இறந்த வீரர்களையும் தெய்வமாக வழிபடும் வழக்கமும் பழைய தமிழ் மக்களிடையே காணப்பட்டது. இப்படிப்பட்ட விவரங்களிலிருந்தும் பழைய தமிழர்கள் வீரர்களாக வளர்ந்தார்கள் என்று சித்தாந்தம் செய்வது தவறாகாது" என்று சொன்னேன்.

இது கேட்ட நகர நண்பர் சொன்னார்:—"அப்படிப்பட்ட வழக்க ஒழுக்கங்கள் செயற்கரிய வீரச் செயல்களைச் செய்யும்படி அவர்களைத் தூண்டியிருக்கும் என்று தாங்கள் ஊகிப்பது சரிதான். ஆனால், இறந்த வீரனுக்கு ஞாபகார்த்தமாய் ஒரு கல்-தூணை நிறுத்தி அதில் அவனைத் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்து கோவில் கட்டி வழிபடுவது நல்ல வழக்கம் தானா? உண்மையான—அறிவு தழுவிய—வீரர் வழிபாடு நல்லது தான். ஆனால் இறந்து போன வீரர்களின் நினைவுக் குறியான வீரக் கல்லையே தெய்வமாக வழிபட்டது, பின்னாளில் மூட நம்பிக்கைகளை வளர்த்து விட்டதல்லவா? அது தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டந்தானே!"

அவர் அப்படிச் சொன்னதும் நான், "தாங்கள் சொல்லுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் பழைய காலத்தில் அந்த வழக்கம் நல்ல பயனையே அளித்து வந்தது என்று தெரிகிறது. அவர்கள் போர்வெறியை உண்டாக்கும் முரசையும் 'வீர முரசு' என்று அழைத்துப் பூஜை செய்து வழிபட்டு வந்தார்கள். ஆனால் அந்த முரசையே தெய்வமென்று கருதி உண்மையான தெய்வ பக்தியில்லாமல் இருந்து விட்டார்களா? அப்படி ஒன்றுமில்லையே!" என்றேன். பிறகு "எப்படியும் அந்தப் பழைய நாகரிகத்தின் ஸாராம்சத்தை நாம் இந்நாளிலும் ஒப்புக்கொள்ளலாம்; அதிலுள்ள மூட நம்பிக்கைகளைத் தள்ளி விடலாம்" என்று நாங்கள் மூவரும் ஒருமுகமாக அபிப்பிராயப்பட்டோம்.

ஆனால் நண்பர்கள், "அரசர்களுக்கு வீரந்தானா விசேஷமாக வேண்டியது. நியாயம் வேண்டாமா? வீரத்தைக் காட்டிலும் தியாக உணர்ச்சி பெரிதல்லவா?" என்றெல்லாம் புதிய கேள்விகள் கேட்டார்கள். நான் சொன்னேன்:- "பழைய தமிழ் அரசர்கள் மூன்று முரசுகள் வைத்திருந்தார்கள். அவற்றுள் ஒன்று தான் வீர முரசு; மற்றவை நியாய முரசு, தியாக முரசு என்பன. வீரம், நியாயம், தியாகம் என்னும் மூன்று அரும் பெரும் குணங்களும் அவர்களுக்குப் புகழ் விளைத்தன. கண்ணகியின் புருஷனை கோவலனைக் கொன்றது தவறு என்று பாண்டிய மன்னன் உணர்ந்ததும், 'யானோ அரசன்? யானே கள்வன்!' என்று மண்ணில் விழுந்து உயிரை விட்டான்!—என்று சிலப்பதிகாரம் என்ற தமிழ் நூலிலிருந்து தெரிந்து கொள்கிறோம். அப்படி உயிரையே தியாகம் செய்த அந்த நீதி மன்னனும் வீர மன்னன்தான். பழைய அரசர்கள் வீரப் புகழையே சிறந்த புகழாக மதித்தார்கள். அந்த வீரப் புகழின் மோகந்தான் அவர்களுக்கு நீதியிலும் தியாகத்திலும்கூட அவ்வளவு ஆசையை வளர்த்து விட்டதென்று ஊகிக்கலாம்."

நாம் அதே பரம்பரையா?

"தாங்கள் சொல்வதிலிருந்து பழந்தமிழர் வீர வாழ்வினால் ஒழுக்க வாழ்வு பெற்றார்கள் என்றுகூடத் தெரிகிறது. வீரம் அவர்களுடைய வாழ்க்கையின் பல துறைகளிலும் வெளிப்பட்டிருக்கவேண்டும் என்றும் தெரிகிறது" என்று ஒப்புக்கொண்ட நகரவாசி, "ஆனால் அப்படிப்பட்ட காலத்திலும் சமூக உயர்வு தாழ்வுகள் ஏற்பட்டுத் தமிழர்களின் குணாதிசயத்தைக் கெடுத்துவிட்டன அல்லவா?" என்று மெள்ளக் கேட்டார். அதற்கு நான், "வீர தர்மத்தின் லட்சியத்தைக் காப்பாற்றுவதில் படைவீரர்களும், தங்கள் தலைவர்களோடும் வீர மன்னர்களோடும் போட்டி போட்டார்கள் என்று சொல்லலாம். அரசர்களுக்கும் படைவீரர்களுக்கும் இடையே ஏற்பட்ட அந்த வீர நட்பும் சகோதர நேசமும் அந்நாளில் சமூக உயர்வு தாழ்வுகளையும் மறைத்துவிட்டன. ஆம்; பிற்காலத்திலேதான் ஜாதி-உணர்வு தடித்துப்போய் நமது நாகரிகத்தை நாசமாக்கி யிருக்கவேண்டும்!" என்றேன். "அப்படியானால், அவர்களுடைய சந்ததிகளா நாம்? இதுதானா அந்தத் தமிழ் நாடு?' என்ற ஆராய்ச்சியைக்கூட இன்று நாம் புதிதாகச் செய்து பார்க்கவேண்டியதுதான்!" என்று சிரித்தார் அவர்.

இப்படியெல்லாம் விவகாரம் செய்து கொண்டே மகாபலிபுரத்தை அடைந்தோம். அங்கே உள்ள சிற்பச் செல்வங்களைப் பார்த்து வந்த நகர நண்பர், "இவற்றை யெல்லாம் நிர்மாணம் செய்த மகாமல்லனுடைய பெயரால் இந்த ஊர் மகாமல்லபுரம் என்று வழங்கிவந்திருக்க, அந்தப் பெயரை மகாபலிபுரமாக்கிய மடமைதான் என்ன?" என்று ஆச்சரியப்பட்டார். கிராமவாசியோ, அந்தச் சிற்ப விசித்திரங்களைக் கண்டதும், "ஆஹா! அசுர சிருஷ்டி!" என்று அந்த ஆச்சரியத்திலே முழுகிப்போனார். அப்போது நான், "இதே மன நிலைதான் மகாமல்லபுரத்தை மகாபலிபுரமாக்கிவிட்டது! இந்தக் குன்றுகளையும் கற்பாறைகளையும் அழகுச் செல்வமாக்கிய அற்புதம், மகாமல்லன் போன்ற அரசர்களின் சௌந்தரிய உணர்ச்சியும் கலைத்திறமும் தான்—என்பதை நம்ப முடியாதவர்கள், அசுர சக்கரவர்த்தியான மகாபலியின் மந்திர பலமும் அசுர சக்தியுந்தான் ஒரு பழைய யுகத்திலே இப்படியெல்லாம் செய்திருக்கவேண்டுமென்று நம்பத் தொடங்கிவிட்டார்கள். அரசர் சிருஷ்டி அசுரர் சிருஷ்டியாகி விட்டது; மகாமல்லபுரமும் மகாபலிபுரமாகிவிட்டது!" என்று சமாதானம் சொன்னேன்.

மேலும் சொன்னேன்:—"கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்த மகா வீரன் தான் மகாமல்லன் என்பவன். அவன் யுத்த வீரன் மட்டுமல்ல; கலை வீரனாகவும் விளங்கினான். சென்ற சில நூறு வருஷங்களுக்குள், 'அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் தானா நாம்?' என்ற சந்தேகமே வந்து விட்டது நம்மவர்களுக்கு. மகாபலிபுரத்தை முதல் முதல் பார்க்கும் தமிழர்களுக்கு எப்படிப்பட்ட உணர்ச்சி உண்டாகிறதோ அப்படிப்பட்ட உணர்ச்சிதான் உண்டாகிறது. பழைய தமிழ் இலக்கியங்களைப்

(15-ம் பக்கம்)

"புஷ்பஹாரம்"
'மித்திரன்' வாரப் பதிப்பில் அடுத்தவார முதல்
ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்
எழுதியுள்ள
புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது.

சிறு கதை

'போன மச்சான் திரும்பி வந்தான்'

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

அட்டாபுரம் என்னும் ஊரில் குளக்கரை. ஸ்திரீகள் இடுப்பில் குடத்தோடு, குசு குசு வென்று ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். எல்லோருக்கும் ஸ்நானம், துணிதுவைப்பு ஒன்றும் ஓடவில்லை. தினம் விழுப்போடு யாரேனும் துவைத்தால், பெரியவர்கள் "ஐயோ! கலி முற்றிவிட்டதே! பெரியவர்கள் சின்னவர்கள் கிடையாதே! மட்டு மரியாதை போய்விட்டதே! புக்ககம் வந்த மாட்டுப்பெண்கள் (மருமகள்) துளிக்கூட பயமில்லாமல் இரைந்து பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் தண்ணீரை வாரி மேலே கொட்டுகிறார்களே!" என்று ஒரு அத்யாயம் கூப்பாடு போடுவார்கள். இன்று எல்லாருடைய பார்வையும், அதோ எதிர்க் கரையில் உட்கார்ந்து சந்தியா வந்தனம் செய்து கொண்டிருக்கும் யதீச்வரர் பால் சென்றது. சேச்சி லக்ஷ்மியிடம் சொல்லி லக்ஷ்மி ஜானகியிடம் சொல்லி, இப்படி ஒரு வார்த்தை பத்து நிமிஷத்துக்குள்ளாக கிராமம் பூராவும் பரவிற்று. இந்தச் செய்தி அவ்வூராரனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. அந்த வதந்தியை ஒரு பெண் கேட்டதும் "ஐயோ, தலை விதியே! ஈசா இதுவு முன் திருவிளையாடலா" என்று கூவி வேரற்ற மரம் போல் கீழே சாய்ந்தாள். இவ்விதம் அப்பெண்ணுக்கு சோகத்தையும், ஊராருக்கு வியப்பையும் அளித்த அந்த வதந்தி என்ன வென்று பார்ப்போம்.

இன்றைக்கு பத்து வருஷங்களுக்கு முன் இன்பவல்லி யென்ற அந்த மங்கையின் கணவன் திடீரென்று ஒரு நாள் இரவு காணமல் போய்விட்டான். அதற்குக் காரணம் மாற்றுந்தாயின் கொடுமை தான் என்று பேசிக்கொண்டனர் ஊரார். இன்பவல்லிக்கு பதினைந்து வயது. அடுத்த மாசம் சாந்தி கல்யாணம் செய்துபுக்ககம் அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்திருந்தனர். பையனைக் காணவில்லையென்ற செய்தியைக் கேட்டு பெண்ணின் தாய் தந்தையர் ஆறாத் துயரிலாழ்ந்தனர். ஆனால் இன்பவல்லி தனது குழந்தைப் புத்தியினால் கணவன் சென்றதை அவ்வளவு கஷ்டமாக மதிக்கவில்லை. ஆனால் வயதாக ஆக, தன் நிலையை உணர்ந்தாள். என்ன செய்வது? இருப்பதோ ஓர் சிரமம். தன் மனத்தை வெளியிட முடியாமல் தவித்தாள். எங்கு சென்று தேடுவது? யாரிடம் கேட்பது? வருஷங்கள் ஓடி மறைந்தன. இன்று அதே ஆசாமி ஸந்யாஸக் கோலத்தோடு குளக்கரையில் வீற்றிருப்பதாகக் கேள்விப் பட்டவுடன்தான் மேல் கூறியபடி அந்தப்பெண் சோகமுற்று கீழே விழுந்தது. உடனே அவள் தந்தையும், மற்றும் கிராமத்துப் பெரியமனிதர்களும் சேர்ந்து மேற்படி யதீசவரரின் எதிரில் சென்று "அப்பா ராஜகோபாலா! உனக்கு எதற்காகவப்பா இந்தகோலம்! தங்கச் சிலைபோல் மனைவி, பத்து வருஷங்களாகத் தவித்துக் கொண்டிருக்கிறாளே! ஆத்துக்கு வாடாப்பா. இந்தமட்டுமாவது இந்த ஜன்மத்தில் உன்னைப் பார்க்க முடிந்ததே! என்று மிகவும் பரிவுடன் அழைத்தனர். பால சன்யாஸியோ கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்து கொண்டிருந்தார். எதிரில் பலர் நின்று இரைச்சலிடுவதைக் கண்டு சன்யாசி கண்ணை விழித்தார். "அவர்களிடம் என்ன விசேஷம்? என்ன கேட்கிறீர்கள் புரியவில்லையே" என்றார் "அப்பா! ராஜகோபாலா ஏதப்பா இப்படிச் சொல்கிறாய்? சன்யாசம் வாங்கிக்கொண்டவுடனேயே மனது விரக்தியடைந்துவிடாது. எத்தனையோ பேர் மறுபடி கிரகஸ்தாச்ரமத்தில் வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணமாக அர்ஜுனன் யதி வேஷத்திலிருந்து சுபத்ரையை மணம் புரியவில்லையா? உனது வேஷத்தைக் கலைந்தெறி என்றனர்" இப்படிச் சொல்வதைக் கேட்ட சன்யாசிக்கு மனம் திடுக்கிட்டது. இவர்கள் பலவந்தமாக நம்மைக் கொண்டு சென்று மணம் புரிவித்துவிடுவார்களோ என்று பயமுண்டாயிற்று. ஆயினும் வெளிக்கு உரத்த குரலில்:—"ஸ்வாமிகளே! தயை செய்து என்னை மன்னியுங்கள். நான் ஊரூராகத் தீர்த்தாடனம் செய்து வரும் ஒரு பரதேசி. என்னை ஸம்சார பந்தத்தில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். என் பெயர் ராஜகோபாலனில்லை" என்றார். இந்த வார்த்தையைக் கேட்டு சிலர் சிரிக்க ஆரம்பித்தார்கள். சிலர் கோபத்தோடு "விடாதேடா! பொய் சொல்லுகிறான்! பெண்டாட்டியை வைத்துக் காப்பாற்றத் துப்பில்லை." வீண் வேஷம் போடுகிறான்! என்று கர்ஜித்தனர். சன்யாசியைச் சுற்றி பெருங் கூட்டம் கூடி விட்டது. இன்பவல்லியின் தந்தை சொல்லொணா வருத்தத்தோடும், அவமானத்தோடும் தலை குனிந்து வீடு சென்றார். அப்போதுதான் புதிதாக வந்திருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆர். ஜி. பால் என்பவர் "என்ன கூட்டம்!" என்று விசாரிப்பதற்காக அங்கு வந்து சேர்ந்தார். சிறிது நேரத்துக்குள் விஷயத்தைத் தெரிந்து கொண்டார். உடனே ஷை சன்யாசியிடம் சென்று பின்வருமாறு கூறினர்: "ஸ்வாமிகளே! தங்களை இவ்வளவு அபசாரப் படும் வண்ணம் செய்த குற்றம் என்னுடையது. இவர்கள் தேடும் ராஜகோபாலன் நான் தான். நான் பத்து வருஷங்களுக்கு முன் ஏதோ சிறு பிள்ளைப் புத்தியினால் வீட்டில் கோபித்துக் கொண்டு அந்நிய நாடு ஓடி விட்டேன். பின்பு சில வருஷங்கள் சென்ற பின் நான் செய்தது தவறென்றுணர்ந்தேன். ஆயினும் இவர்களுக்குத் தகவல் ஒன்றும் தெரிவிக்கவில்லை, திடீரென்று வந்து மகிழ்ச்சியளிக்க நினைத்தேன்" என்றார். இதைக்கேட்டு அங்கிருந்தோரனைவரும் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டனர். சன்யாசியும் கவலை நீங்கினார். அடுத்த க்ஷணத்தில் இன்ஸ்பெக்டர் தம் மனைவியிடம் சென்று, மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

நவ நாகரீகம்

★

கூரை

★

(காசினி எழுதியது)

* * * 'மாமி! மாமி வீட்டில் இல்லையா?' என்று கூப்பிடும் குரல் கேட்டு எழுந்து கூடத்துக்கு வந்தேன். அங்கே, ஒரு கைப்பையின் பிடியைப் பிடித்து இலேசாக ஆட்டிக்கொண்டு ஆனரபிள் சிவன் பெண் பத்மா நின்றுகொண்டிருந்தாள்.

'வா அம்மா! என்ன விசேஷம்' என்று கேட்டேன்.

'எங்க மாமா பிள்ளைக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டதாம். நாளைக்கே அம்மா புறப்பட்டுப் போகணுமாம். கூறை, நிச்சயதாம்பூலப் புடவை இரண்டையும் அம்மாவையே வாங்கி வரும்படி மாமா எழுதி இருக்கிறார். அம்மா உங்களை உடனே அழைச்சுக்கொண்டு வரச் சொன்னா. காபி, டிபன் எல்லாம் எங்காத்திலேயே சாப்பிடலாம் வாங்கோ!' என்று பத்மா தான் வந்த காரியத்தைக் கூறி, என்னை துரிதப் படுத்தினாள்.

நாங்கள் மூவரும் அன்று போகாத புடவைக் கடை பட்டணத்திலேயே இல்லை எனலாம். நல்ல புடவை என்று மனசுக்குத் தோன்றினால், விலையைக் கேட்டதும், பத்மா சொன்னமாதிரியில் அப்படியே ஸ்தம்பித்துவிட்டது எனலாம். கடைசியில், சரிகையும் சிகப்புப் பட்டும் கலந்து நெய்யப்பட்ட ஒரு புடவையை நூற்றி எழுபத்தி ஐந்து ரூபாய்களுக்கு வாங்கினோம். புடவை பார்வைக்கு மிகவும் நேர்த்தியாக இருந்தது. சரிகையும், பட்டும் கலந்து நெய்திருந்ததால், சிகப்பு சரிகை மாதிரியில் தகதக என்று இருந்தது.

'பெண் நல்ல சிகப்பாக இருக்கிறாள் என்று மாமா எழுதி இருக்கிறார்; இந்தப் புடவை அவளுக்குக் கட்டாயமாக நன்றாக இருக்கும்!' என்றாள் பத்மா.

'நூற்றி இருபத்தி ஐந்து ரூபாய்க்குள் கூறையும் ஐம்பது ரூபாய்க்கு நிச்சயதாம்பூலப் புடவையும் வாங்கும்படித் தம்பி எழுதி இருந்தான். ஒரு புடவையே அந்த விலை ஆகி விட்டதே?' என்றாள் ஆனரபிள் சிவன் மனைவி.

"நிச்சய தாம்பூலப் புடவையைச் சொன்ன விலைக்கு வாங்கினால் போச்சு! 'என்றாள் பத்மா.

'சரிதான்; இந்தப் புடவை ஆறு கஜம் புடவையாச்சே? உங்கள் தம்பி ஆம்படையாள் ஆசாரம் பார்ப்பாள் என்று சொல்லுவீர்களே?' என்று என் மனதில் தோன்றின சந்தேகத்தைச் சொன்னேன்.

'ஆமாம்னு; இது எப்படி நமக்கு மறந்து போச்சு? தங்கம் தாலிகட்டும் சமயம் மாட்டுப் பெண்ணுக்கு வாழ்க்கைப்பட்ட புடவை மாதிரியில்தான் கட்டணம் என்று சொல்லத்தான் செய்வாள். இப்போ என்ன செய்யலாம்?' என்று ஆனரபிள் சிவன் மனைவி விழித்தாள்.

பத்மாவுக்கு அந்த அழகிய புடவையைத் திருப்பிக் கொடுக்கக் கொஞ்சமும் இஷ்டமில்லை. கடைசியில் ரொம்பவும் கொஞ்சமாக சரிகை போட்ட ஒரு ஒன்பது கஜம் புடவையை எழுபத்தி எட்டு ரூபாய்கள் என்று வாங்கினோம். இதைக் கூரையாகவும், ஆறு கஜம் புடவையை நிச்சயதாம்பூலப் புடவையாகவும் வைத்து விடுவது என்று ஏற்பாடு செய்தோம்.

'இனிமேல் இப்படி எல்லாம் சாஸ்திரம் பார்த்தால் முடியாது. புடவை விற்கிற விலைக்கு 5-கஜமாகக் கட்ட முடியுமா என்று பார்க்கவேண்டுமே ஒழிய, இப்படி 18 முழம், 19 முழம் என்றெல்லாம் கட்டினால், கட்டி வராது?' என்றாள் பத்மா.

'இப்படிச் சரிகை போட்டு வாங்க வேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லிஇருக்கு? சுமாராக வாங்குகிறது. இதுக்காக நம்ம புராதன பழக்கவழக்கங்களை விடுவாளோ?' என்று என் அத்தை ஆக்ஷேபித்தாள்.

'இப்படி வாங்கினாலும், இந்தக் காலத்துப் பெண்கள், கொஞ்சமாவது அச்சானியம் இல்லாமல், கூரைப் புடவையை வெடுக்கென்று மூனு கஜம் கத்தரித்து, ஜாகட்டு, குழந்தைக்குப் பாவாடை என்று தைத்து விடறதுகள். எங்கே கூரைப் புடவையாச்சே; ஏதோ கலியாணம், கார்த்தியில் நம்ம பழைய சம்பிரதாயப்படி கட்ட உதவுமே என்று வைச்சு வைக்கிறா? இதுக்குப் பத்மா சொல்ரது போல் முதலிலேயே லக்ஷணமா ஆறு கஜமாகவே வாங்கலாம்!' என்றாள் பக்கத்தாத்துப் பங்கஜத்தின் மாமியார். ஏது எப்படியானாலும் புடவை விலைகள் அசாத்தியமாகத்தான் இருக்கிறது. ஆனரபிள், சிவன் மனைவி சொன்னது போல், உள்ளே இருக்கும் புடவைகளை உபயோகிப்பதே நலம் என்று தோன்றுகிறது.

கதாசிரியரின் கடிதம்

★

"கஜ முகன்"

'பிரபஞ்சரத்னம்' பத்திரிகையின் ஆசிரியருக்கும் 'அஞ்சா நெஞ்சன்' என்ற புனைப்பெயரைக் கொண்டு கதாசிரியராக விரும்புபவருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தை இங்கே எழுதுகிறேன்:—

அன்பார்ந்த ஆசிரியர் அவர்களுக்கு,

"அஞ்சாநெஞ்சன்" எழுதிக் கொண்டது. ஐயா! தங்கள் 'பிரபஞ்சரத்னத்தைப் படிக்கும் பொழுதெல்லாம் நான் இந்த பிரபஞ்சத்திலேயே இருப்பதில்லை. என்ன ஹாஸ்யம்! என்ன உணர்ச்சி! அந்த எழுத்துக்களில் என்ன வீரம் த்வனிக்கிறது! இந்தமாதிரிப் பத்ரிகை இதுவரை வெளிவந்ததுமில்லை, வரப்போவதுமில்லை, என்பதை நான் உறுதியுடன் கூறுவேன். நீங்கள் எழுதிய "மண்ணெண்ணெய்க்கடை மாரியம்மாள்" என்ற கதை ஒன்றுக்கே ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம்! (என்னிடமில்லையே!) அதுதான் போகட்டும். 'வீராசாமியின் கொலை அல்லது விறகுக்கடைச் சதி' என்னும் கதையில் அப்படியே ஹாஸ்ய ரஸத்தைப் பொழிந்து தள்ளியிருக்கிறீரே!

'பிரபஞ்ச ரத்ன'த்தைப் படித்தவுடன் நானும் ஏன் ஒரு கதாசிரியனுகப் போகக்கூடாது என்று நினைத்துத்தான் 'சுண்டைக்காய் வற்றல் அல்லது சுருளி ஆண்டியின் கொலை' என்று ஒரு கதை எழுதி இத்துடன் அனுப்பியிருக்கிறேன். தயவுசெய்து இதைப்பிரசுரிக்குமாறுகேட்டுக் கொள்கிறேன்! 'பிரபஞ்சரத்னம்' நீடூழி வாழ்க.

இப்படிக்குத் தங்களை

என்றும் மறவாத,

'அஞ்சா நெஞ்சன்'

குறிப்பு:—இத்துடன் கதை பிரசுரிக்காவிடில் திருப்பி அனுப்புவதற்கு ஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன்.

பதில்

அன்பார்ந்த அஞ்சா நெஞ்சன் அவர்களுக்கு,

நீங்கள் என் கதைகளையும் 'பிரபஞ்ச ரத்ன'த்தையும்பற்றி எழுதிய புகழுரைக்கு மிகவும் வந்தனம். நீங்கள் அனுப்பிய கதையைப் படித்தேன். ஆனால் அது பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கதையைத் திருப்பி அனுப்பவும் இயலாது. ஏனெனில் நான் கதையைத் திண்ணையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கும்பொழுது அதுகாற்றில் பறந்து தெருவில் போய் விழுந்துவிட்டது. அதை எடுத்துவர ஓடுவதற்குள் ஒரு கழுதை அதைத் தின்றுவிட்டது! மன்னிக்கவும்.

இப்படிக்கு

'பிரபஞ்ச ரத்னம்' ஆசிரியர்.

2-வது கடிதம்

அன்பார்ந்த ஐயா,

கடிதம் கிடைத்தது. அந்தக் கதை போனல் போய்விட்டுப் போகிறது. இந்த வாரம் நீங்கள் எழுதிய "காணமற் போன கடிதம் அல்லது கண்டங்கத்திரிக்காயின் கசப்பு" என்னும் கதை என் உள்ளத்தை அப்படியே கொள்ளை கொண்டு விட்டது! இத்துடன் மற்ருெரு கதை அனுப்பியிருக்கிறேன். கதையின் பெயரைப் பார்த்தவுடனேயே பிரமித்து விடுவீர்கள்! "கிணற்றடிச் சம்பவம் அல்லது கிழவரின் காதல்" என்ற பெயரைப் பார்த்தவுடன் உங்களுக்குச் சிரிப்பு வருமென்று நினைக்கிறேன்.

இப்படிக்கு

தங்கள் அன்புள்ள

'அ. நெஞ்சன்'

பதில்

ஐயா,

தங்கள் கதையைப் படித்தேன். சிரிப்பு வருவதற்குக் கொஞ்சம் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. கதை ஏதோ இருக்கிறது. முந்தியதைவிடப் பரவாயில்லை. கதையில் கிழவரைச் சாகடித்திருந்தால் மிகவும் நன்ருய் இருக்கும். இருந்தாலும் அக்கதையைப் பிரசுரிப்பதிற்கில்லை. திருப்பி அனுப்புவதற்கும் முடியாமல் இருக்கிறேன். ஏனெனில் பேப்பர்காரனிடம் அந்தக் காகிதத்தைப் போட்டு விட்டாள் என் மனைவி மன்னிப்பீர்கள் என்றுநம்புகிறேன்.

இப்படிக்கு,

ஆசிரியர்

3-வது கடிதம்

ஐயா,

கடிதம் கிடைத்தது. இத்துடன் 'கடுகு வடை அல்லது கதம்பமாலையின் வாசனை!" என்ற கதை அனுப்பியிருக்கிறேன். இதையாவது ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு

அ. நெ. ச்ன்.

பதில்

ஸ்வாமி!

"கடுகு வடைக்கும் கதம்ப மாலைக்கும் சம்பந்தப்படுத்தி எழுதிய கன்றுயை என்னவென்று உரைப்பது! உமக்கு அபார மூளை இருக்கிறபடியால் தயவு செய்து இன்றோடு இத்தொழிலை விட்டு விடுங்கள்! உம் மாதிரி எழுத்தாளர்கள் கிளம்பினால் நாங்களெல்லாம் பத்திரிகையை மூடிக் கொண்டு போக வேண்டியதுதான்! தயவு செய்து இனிமேல் நீங்கள் ஒன்றும் அனுப்ப வேண்டாம். நீங்கள் அனுப்பிய கதையை என்மனைவி அடுப்புப் பற்ற வைத்துவிட்டாள். இனி போதும் உங்கள் கதை.

இப்படிக்கு

(ஆ—ர்)

4-வது கடிதம்

ஓய் மூட சிகாமணியே!

எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டீரே! உமது கதைகள் எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கின்றன என்பது உமக்குத் தெரியுமா? போனல் போகிறது என்று கொஞ்சம் தூக்கிவைத்து எழுதினல் உச்சி குளிர்ந்துவிட்டதோ! உமது பத்திரிகையை எவன் வாங்குகிருன் என்று நினைத்தீர்? அடுப்பு பற்றவைக்க மண்ணெண்ணை கிடைக்கமாட்டேன் என்கிறதே. அரையணவிட்டெறிந்தால் ஒரு பத்திரிகையாவது கிடைக்கிறதே, அதையாவது வாங்கி அடுப்புப் பத்தவைக்கலாமென்று வாங்குகிறேனே தவிர அதிலுள்ள விஷயத்தை இதுவரை கண் திறந்து கூடப் பார்ப்பதில்லை அய்யா! நான் அனுப்பிய கதைகளைத் திருப்பி அனுப்பும். இல்லாவிடில், நான் அனுப்பிய ஸ்டாம்புகளை யாவது திருப்பி அனுப்பும். இல்லாவிடில் கேஸ் போட்டு உமது கொட்டத்தை அடக்குவேன்.

இப்படிக்கு

நவீனக் கதாசிரியன் அஞ்சா நெஞ்சன்.

இத்துடன் இவர்கள் கடிதப் போக்குவரத்து முடிந்து விடுகிறது. ஏனெனில் அஞ்சா நெஞ்சன் எழுதிய கடிதத்திற்கு பதில் வரவில்லை. பேப்பர் பஞ்சத்தினல் 'ப்ரபஞ்ச ரத்ன'பத்திரிகையும் நின்று போயிற்று!

தமிழர் வீரம்

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

படிக்கும் தமிழர்களுக்கும், மூத்தியமாகப் பழைய சங்க நூல்களைப் படிக்கும்போதும் 'அந்தப் பரம்பரை தானு நாம்?' என்ற அதே சந்தேகம் ஏற்படத்தான் செய்கிறது!"

வீரமும் ஒற்றுமையும்

மகாபலிபுரத்திலிருந்து திரும்பி வரும் வழி நெடுக, இந்த உணர்ச்சியும் நினைவுகளும் எங்கள் உள்ளமெல்லாம் நிறைந்து ததும்பிக்கொண்டிருந்தன. திடீரென்று நகரவாசி "பழைய தமிழர்களின் வீரமானது, நியாயம் தியாகம் முதலான அருங் குணங்களாக விரிந்து வளர்ந்த போதிலும், அது ஒற்றுமையாகக் கனிந்து விட்டதா?" என்று ஒரு கேள்வி போட்டார்,—பழைய தமிழ் வீரன் ஒருவன் தன் கை வேலை முழுப்பலத்துடனும் வீசியெறிவது போலே! அந்தக் கேள்விக்கு நான் "இல்லை" என்று தான் தலை குனிய வேண்டியிருந்தது.

கடைசியாக நான், "வாழ்க்கை ஒரு போராட்டம் என்ற இயற்கைத் தத்துவத்தைக் கண்டு கொண்ட தமிழர்கள், 'மனிதன் கூடிவாழும் பிராணி' என்ற இயற்கைத் தத்துவத்தையும் கண்டு அதற்குத் தகுந்த சமுதாய வாழ்வு வகுத்துக் கொள்ளத் தவறிவிட்டார்கள்! அந்தோ, பரிதாபம்! பரிதாபம்! மற்ற இந்தியர்களையும் அன்னியர்களையுங்கூடச் சகோதரர்களாக வரவேற்று அவர்களுக்கும் தங்கள் நாட்டிலே தங்க இடம் கொடுத்த மக்கள் தங்களுக்குள்ளே சகோதர நேசத்தை வளர்த்துக் கொள்ளவில்லை! வீரத்தில் கூர்க்கர் முதலானவர்களுக்கும், தர்ம வீரத்தில் ராஜபுத்திரர்களுக்கும் மிச்சமாயிருந்தவர்கள் ஒற்றுமைக் குறை விலும்விட இந்தியர்களை மிஞ்சிப் போய்விட்டார்கள். ஆனால் தற்காலத் தமிழ் நாட்டிலோ ஒற்றுமைக் குறைவோடு வீரமும் குறைந்து குறைந்து ஓர் அபூர்வச் சரக்காகி விட்டது. பழைய சரித்திர ஆராய்ச்சிகளாலும் இலக்கிய ஆராய்ச்சிகளாலும் உண்மை நிலையைக் கண்டு கொள்ளும் நாம், அந்தப் பழைய வீர உணர்ச்சியோடு புதிய ஒற்றுமை-உணர்ச்சியையும் சேர்த்துக் கால நிலைக்கு இசைவாக அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்" என்று கூறி முடித்தேன்.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 3/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S.H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

குண்டலகேசி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

காதலர் இருவரும் கூடாரத்திற்குள் அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தனர். பெண்மைக்குள்ள பெரும் வன்மையால், தன் மனத்தில் எழுந்த உணர்ச்சியை அடக்கிவிட்டாள் பத்திரை. ஆடவர்க்கு அகத்தில் உள்ளது முகத்தில் தெரிந்து விடும்; அதுவும், கண்களிலிருந்து மிக எளிதாக உணர்ந்து கொள்ளலாம்; ஆனல் அறிவுக் கூர்மையுடையவரே அதை அறிய இயலும். நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால், கண்ணல்லது இல்லை பிற',பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்' என்பன பொய்யா மொழியன்ருே? கண்ணைவிடச் சிறந்த உறுப்பு வேறில்லை.

உங்கள் கவலை என்ன?

"உங்கள் கண்களைப் பார்க்கும்போது ஏதோ கவலைப்படுவதாகத் தெரிகிறது. என்னவென்று சொல்லக்கூடாதா?" என்ருள் பத்திரை.

"எனக்கு என்னகவலை? உன் மதிவதனத்தைக் கண்டபின் கவலை என்ன எனக்கு? உன் கண்களில் நீர் துளும்பியிருப்பதால் கவலை உனக்குத்தான் என்று அறிகிறேன்; அதனல் எனக்குக் கவலை ஏற்படுகிறது" என்று புன்னகையுடன், மொழிந்தான்.

அவன் வார்த்தைகளை கேட்டவுடன், அவள் கண்களில் நீரூற்று மீண்டும் சுரந்தது.

"இல்லை..."

"ஏன் வார்த்தைகளை விழுங்கிறுய்? என்னிடம் சொல்ல விருப்பம் இல்லையா? நீ இவ்வாறு ஒரிவாய்ப்பட்ட வெண்ணெயைப் போல் உருகி வெம்புவது எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது"

"உங்களிடம் கூருமல் இதை யாரிடம் கூறுவது? நாளையோடு இந்திரவிழா முடிகிறது. என் விரதமும் இன்றுடன் முடிகிறது. நான் இங்கு இனி எவ்வாறு......" என்று குனிந்து கொண்டே நீரைச் சொரிந்தாள் கண்களினின்றும். உள்ளம் கலங்கியவளாய்ச் சிறிது நாழிகைக்கொருதரம் நீண்ட பெருமூச்சு விட்டு விம்மியிருந்தாள்.

"பேதாய் இதற்குத்தான் இவ்வளவு கவலையா? இந்தக் கலக்கமா? உன் விருப்பம் போல் நான் நடக்கிறேன். நம்மைக் கூட்டிவைத்த போதிசத்துவன் பிரித்து வைப்பானு? இடையருத இன்பத்தை நமக்கு அவனே அளிப்பான், நம் காதல் வினையின் விளைவு; ஆதலால்கவலையுருதே",என்ருன் ஸத்துகன்.

"நான் உங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒப்புவீர்களா?"

"உன் வார்த்தைகளுக்கு மாறு சொல்பவன் அல்ல நான்; இவ்வளவு ஐயம் ஏன்?" என்று அவள் நெற்றியில் விழுந்த மயிரை ஒதுக்கினன்.

பத்திரை:—"தாங்கள் என் கன்னிமாடத்திற்கே இன்று முதல் வரவேண்டும். இரவில் எவ்வளவு நாழிகை ஆயினும் தங்களுக்காகக் காத்திருப்பேன்"

ஸத்துகன்:—"அவ்விதமே வருகிறேன்; என்னல் சிறிதும் தடை ஏற்படாது"

பத்திரை:—"வேறு தடை இரா; அது என் பொறுப்பு, கன்னிமடத்தின் வாசலில் வசந்தி காத்திருப்பாள்."

ஸத்துகன்:—"நான் வருகிறேன், கவலையின்றி கன்னி மாடம் செல்"

"தாங்கள் வார்த்தைகளை நம்பி நான் செல்கிறேன்." என்ருள் பத்திரை.

"என்னிடம் இவ்வளவு நம்பிக்கைக் குறைவா? பொழுது போகிவிட்டது விரைவில் போ" என்றனன் ஸத்துகன்.

* * * *

பத்திரையின் மனோநிலை

பத்திரைக்கு அப்போது தான் அமைதி உண்டாயிற்று. எனினும் சிறிது நாணம்தான்; 'அவ்வளவு தீவிரமாகப் பேசி விட்டேனே, 'காதல் எல்லாவற்றையும் மறைத் விடுகிறது. இந்தக் காதற் பசிக்கு ஆறுதலே கிடையாது போலும்' என்று எண்ணினள். உடனே ஸத்துகன் பிடியை விட்டு விலகி வெளியே சென்ருள் வசந்தி, பத்திரையின் முகக்குறிப்பை உணர்ந்து சிவிகை புறப்படுவதற்கு வேண்டியவற்றைச் செய்தாள். புறப்படுவதற்கு சித்தமாயிருந்தது சிவிகை. 'ஸத்துகர் வருவாரா? அல்லது மறந்துவிடுவாரா? என்று ஏங்கியவண்ணம் அவனைப் பன்முறை மனமுருக நோக்கிவிட்டுச் சிவிகைக்குள் புகுந்தாள்.வசந்தியும் உட்கார்ந்தாள். சிவிகை விரைந்து வணிகர் வீதியை நோக்கிச் சென்றது. முன்போல் மஞ்சத்தில் உட்கார்ந்தான் ஸத்துகன். பத்திரையின் மாளிகைக்குச் செல்வது பற்றி அவன் மனம் குதூகலம் கொண்டது. பின் விளையப்போகும் பேரிடர்கள் அவன் அறிவுக்கு புலப்படவில்லை.

அது வரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மறைவில் பதுங்கியிருந்து கவனித்த இளந்தத்தன் பரபரப்புக் கொண்டான். சிவிகை எங்கே செல்கிறது. இவ்விளமங்கை யார்? இவர்கள் காதல் ஏப்படி ஏற்பட்டது? என்று ஆராய்ந்தான். உண்மையை அறிய ஆவல்கொண்டு தன் குதிரையை விரையச் செலுத்திச் சிவிகையை பின் தொடர்ந்தான். நிலவு புறப்படுவதற்குச் சிறிது நாழிகை இருந்தது. ஆனலும் தீபங்கள் ஆங்காங்கே விளங்கின. 'பாவி' ஸத்துகா அழகு மிகுந்த இளமங்கையாம் இவள் யாரோ? பாவம்! உன் வலையில் வீழ்ந்து மடியப்போகிருள் என்று எண்ணிச் சென்ருன். சிவிகையை அணுகிக்கொண்டிருந்தது குதிரை. பத்திரையும் வசந்தியும் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பேசியது ஸத்துகனைப்பற்றியே. அவ்வார்த்தைகள் இளந்தத்தனுக்கு நன்ருகப் புலப்படவில்லை. குதிரையின் நடையொலியைக் கேட்டு 'ஸத்துகனே என்று திரையை அகற்றிப் பார்த்தாள். தக்க சமயம் என்று இளந்தத்தன் முன்சென்ருன், முகத்தை உத்திரியத்தால் போர்த்திக் கொண்டவனுய் "ஸத்துகனை நம்பவேண்டாம் அவன் பெரும் வஞ்சகன் திருடன்; கொலையாளி" என்ருன், உடனே வசந்தி நீ யார்? என்ருள் கோபத்துடன். "உங்கள் நன்மையைக் கோருபவன்என்று கூறிவிட்டு வேறு புறமாகச் செலுத்தினன் குதிரையை. எனினும் மறைவாகச் சிவிகையையே பின்தொடர்ந்தது அக் குதிரை.

இளந்தத்தன் கூறிச் சென்ற அவ் வார்த்தைகள், குதூகலத்துடன் பேசிக் கொண்டிருந்த பத்திரைக்கு இடி விழுந்தாற் போன்று இருந்தன. இருவருக்கும் வியப்பும் அச்சமும் உண்டாயின. 'இவ் வார்த்தைகளைக் கூறிய இவன் யார்? என்னை இவன் எவ்வாறு அறிந்தான். ஸத்துகருக்கு இவன் பகைவனே? என்ன அதிசயம்!'என்று யோசித்தாள் பத்திரை. "இது என்ன ஒன்றும் புரியவில்லையே! இவன் யார்?" என்று கூறினள் வசந்தி. "எனக்கு ஒன்றும் விளங்கவில்லை; இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது; அவருக்கு இவன் பகைவனுக இருப்பான்...இல்லாவிட்டால்..." என்ருள் பத்திரை. "பத்திரை, மறந்து விடு இதை. போகப் போகத் தெரிகிறது" என்ருள் வசந்தி. சிவிகையும் மாளிகை வாயிலை அடைந்தது. பத்திரையும் வசந்தியும் கீழிறங்கிக் கன்னி மாடத்துக்குள்ளே புகுந்தனர். ஆனல் பத்திரை மட்டும், வழியில் பயமுறுத்திய முனிதனை நினைத்து வீதியைப் பார்த்துவிட்டு உள்ளே சென்ருள்; அவள் கண்களுக்கு அவன் அகப்படுவானு?

* * * *

காமன் கோட்டத்துச் சோலையில் அமர்ந்திருந்த ஸத்துகன், 'பத்திரையிடம், இன்றிரவு வருவதாகச் சொல்லி விட்டோமே! சயந்தி இதை உணர்ந்தால் மிகவும் வருந்துவர்ளே! நான் செல்லாவிட்டால் பத்திரை வருந்துவாள். ஒரு நாளேனும் இரவு பிரிந்திராத சயந்தி இன்று இரவு முழுதும் வருந்தியிருப்பாள்,' என்று எண்ணியிருந்தான். சயந்தியைப் பற்றிய சிந்தனை ஒரு புறம் இருந்தாலும், பத்திரையைக் கண்டு மகிழ்வதற்கு அவன் மனம் ஆவல் கொண்டிருந்தது; ஏன் ஏங்கியிருந்தது என்றே சொல்லலாம்.

விற்போல் வளைந்த சந்திரன் சோலையில் மரங்களின் ஊடே, குளிர் வெண்ணிலவை வீசினன். பால் பரந்தன்ன அவ் வெண்ணிலவில் அச் சோலையில் மலர்ந்த பல நிறப் பூக்களும் மந்த மாருதத்தால் ஆடிக் கொண்டு ஒன்றை ஒன்று எள்ளி நகை செய்து விளங்கின. குளிர்ந்த நிலவு. பரந்த சோலை; நிறைந்த இன்பம். ஆ! என்ன ரமணீயமான காட்சி! ஆங்காங்கே பூங்கொடி போல மகளிர் ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர். பொய்கையில் தாமரை மலர்கள், சந்திரனைக் கண்டதும், பிற ஆடவரைக் கண்டு முகத்தைக் கவிழ்க்கும் கற்புடை மகளிர் போல் முகங் குவிந்தன. இளம் பெண்கள் மருண்டு மருண்டு நோக்குவது போல், செங்கழுநீர் மலர்கள் இதழ்க் கண்கள் திறந்து ஸத்துகனை நோக்கின. கட்டவிழ்ந்த அரும்புகளின் மணத்தைத் தென்றல் எடுத்துச் சோலை முழுதும் பரப்பியது. மரங்கள், மலர் விழி திறந்து கம்பீரமாய் ஆடி அசைந்து கொண்டிருந்தன.

கன்னி மாடத்தில்

அக் காட்சிகள் யாவும் ஸத்துகன் மனத்திற்கு இன்பத்தை அளிக்கவில்லை. நாழிகை ஆகிவிட்டதை உணர்ந்தான். பத்திரையைச் சந்திப்பதற்கு விரைந்து எழுந்தான். குதிரைமீது தாவி அமர்ந்து வணிகர் வீதி பக்கம் செலுத்தினன். பரந்த வெண்ணிலவிலே பறவைபோல் சென்றது குதிரை. பத்திரையின் மாளிகையை அணுகியதும் குதிரையை மெல்லச் செலுத்தினன். கன்னி மாடத்தை அடைந்ததும் குதிரையை ஒரு புறம் நிறுத்தி விட்டு இறங்கி உள்ளே புகுந்தான். தீபம், மின் மினிப் பூச்சி போல் விளங்கியது. எதிரில் வசந்தி வந்து ஸத்துகனை உள்ளே அழைத்துச் சென்ருள்.

கன்னி மாடத்தில் பூவணைமீது பொற் கொடி போல் பத்திரை அமர்ந்திருந்தாள். கையில்வீணையைத் தாங்கி, அதன் நரம்பை மெல்ல வருடிக் கொண்டிருந்தாள். அதிலிருந்து எழும் நாத அலைகள், அவள் உள்ளத்தில் இன்ப அலையை எழுப்பின. அறை எங்கும் அகிற் புகை மணம். சாளரங்கள் வழியே நிலவின் இனிய கிரணங்கள் புகுந்து ஸத்துகன் குதூகலத்துடன் உள்ளே புகுந்ததும் பத்திரை உவகையுடன் உடல் பூரித்து எழுந்து அவனைப் பூவணையில் அமர்த்தி உபசரித்தாள்.

ஸத்துகன் அங்கு அமர்ந்ததும் அவன் இடத்தோள் துடித்தது. பத்திரையின் வலது மார்பம் துடித்தது. இருவரும் ஒருங்கே மயங்கிக் கலங்கினர். பேச இயலாது பெருமூச்செறிந்தனர் அப்போது அறையில் ஒருபுறம் நின்றெரிந்த மங்கள தீபம் அணைந்தது. அது கண்டு துணுக்குற்ற வசந்தி விளக்கை ஏற்றச் சென்ருள்; "அணைந்ததை ஏற்ருதே. நிலவின் ஒளி போதும்" என்ருள் பத்திரை. 'காமுகருக்குப் பகுத்தறிவு ஏது?' என்று எண்ணியவளாய் அப்புறம் சென்ருள் அவள். காம விருந்தினர்களாகிய அவ்விருவருக்கும் அவ்விபரீத சகுனங்களைக் குறித்த சிந்தனையே இல்லை. குதூகலித்து இருந்தனர். தாழம்பூவில் நாகம் உறைவதுபோல் பத்திரையுடன் தங்கியிருந்தான் ஸத்துகன்.

ஸத்துகன் கன்னி மாடத்தை விட்டு வெளியேறும் போது நடு இரவு. ஸத்துகன் வெளியேறுவதை உணர்ந்தாலும் அவன் எங்கே செல்கிருன் என்பதைப் பத்திரை உணராள்.

அடுத்த வாரம்:—

காதற் கணிகைதானே!

பெருபகாரம்

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்
எழுதியது

"அன்பார்ந்த ராமுவுக்கு,
நேற்று மாலை என் நண்பர் வீட்டு கலியாணத்து கச்சேரியில் உன் பெரியப்பா பிள்ளை ஸ்ரீதரனை சந்தித்தேன். நீ சக்திக்கு மீறி வேலை செய்வதாயும், உன் உடம்பு ரொம்ப கெட்டுப் போய் துரும்பாய் விட்டிருக்கிறாய் என்றும், அதுவும் இந்த கோடை வெய்யலில் அலைவதால் பதின் மடங்கு அதிக அசௌக்கியமடைந்திருக்கிறாயென்றும் ஸ்ரீதரன் சொன்னான். நானும் உன்னை வருஷம் தவறாமல் கோடை காலத்தில் ஒரு மாதமாவது லீவு வாங்கிக் கொண்டு இவ்விடம் வந்து இருந்து விட்டுபோ என்று அழைத்துக்கொண்டிருக்கிறேன். இந்த தடவையாவது உன் தேகசௌக்கியத்தின் நிமித்தம் கட்டாயம் 'லீவ்' வாங்கிக்கொண்டு வா.

இவ்விடம் சபிதா. குழந்தை முகுந்தன் அனைவரும் க்ஷேமம். அவ்விடத்தில் உன் மனைவி மக்களும் க்ஷேமமென்று நம்புகிறேன்,

இப்படிக்கு
உன் பிரியமுள்ள
சங்கரன்"

என்று பெங்களூரில் வசித்து வரும் ராமநாதன், தன் நண்பன் சங்கரன் எழுதிய கடிதத்தை படித்து முடித்தான். "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' போல் ஆயிற்று அவனுக்கு. அவனும் 'லீவ்' வாங்கிக் கொண்டு கொஞ்ச காலம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் எண்ணி இருந்தான். ஆனால் 'லீவ்' சமயத்தில் சென்னையில் இருந்தால் அவனுக்கு பல தொல்லைகளின் நடுவில் ஓய்வு கிடைப்பது அசாத்தியமென்று கண்டிப்பாகத் தெரியும். எவ்விடம் செல்வதென்று யோசித்துக் கொண்டிருந்த நாளில் சங்கரனின் கடிதத்தைக் கண்டதும் "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" போல் ஆயிற்று.

* * * *

மறுதினமே ஒரு மாத 'லீவு' எழுதிப்போட்டுவிட்டு குடும்ப பந்தத்திலிருந்தும், ஆபீஸ் தொல்லையிலிருந்தும் விடுபட்டவனாய் பெங்களூர் சென்றான். நண்பனின் அகத்தில் அவனுக்கு ஒரே உபசாரம். மாலைப்பொழுது இருவருமாக சினிமா, பாண்ட், பாட்டுக் கச்சேரி, கிளப், லால்-பாக், என்று சுற்றுவார்கள். காலையில் மட்டும் ராமநாதன் மாத்திரம் உலாத்தச் சென்று வருவான், சங்கருக்கு ஒழிவு இராது.

அன்று 'புல் டெம்பிள்ரோட்'டில் உலாவச் சென்றான் ராமு. ரஸ்தாவில் ஒருபுறமிருந்த அழகிய சிறு வீடு ஒன்றும், அதன் முன்புறம் அமைந்திருந்த அழகிய பூந்தோட்டம் ஒன்றும் அவன் மனதைக் கவர்ந்தன. ஒரு விநாடிப்பொழுது; அந்த வீட்டெதிரில் நிதானித்து நோக்கினான். வீட்டின் முன்புறம் வாசற்கதவில் "குருவிக் கூண்டு" என்று வீட்டிற்குப் பெயரிட்டு பொறிக்கப்பட்ட பலகை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அந்த பெயர் அந்த அகத்திற்கு மிகவும் பொருந்தி இருந்தது. கேட்டின் முன்புறம் வளைவின்மீது பூங்கொடியொன்று ஏற்றப்பட்டு, அதில் நக்ஷத்திரங்களைப்போல் மல்லிகைப் புஷ்பங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. காம்பவுண்டின் உள்புறம் நடமாடுவதற்காகக் காலடிப்பாதையொன்றைத் தவிர, மற்ற இடங்கள் பூராவும் பலவித புஷ்பங்கள் குலுங்கும் பூந்தோட்டம். பூந்தோட்டத்தில் பட்டுப் பூச்சியைப்போல ஐந்து வயதுடைய சிறுமியொருவள் குதித்து விளையாடிக் கொண்டிருந்தாள். அந்த பூங்கொடிகளைப் பழிக்கும் எழிலுடைய மங்கை, யொருவள் வீட்டின் முன்புரத்தாழ்வரத்தில் ஒரு கம்பத்தின் மீது சற்று சாய்ந்தவாறு நின்றிருந்தாள். அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவளை எவ்விடத்திலோ பார்த்த மாதிரி ஞாபகமுண்டாயிற்று அவனுக்கு. ஆனால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

பின்பு இரண்டடி முன்னே எடுத்து வைத்தான். அப்பொழுது அந்த குழந்தை ஓடி வந்து அவனை நெருங்கி, "மாமா! மாமா! அம்மா கூப்பிடுகிறாள். வாங்கோ மாமா" என்று கூப்பிடவே, அவனையும் அறியாமல் அவன் அந்த வீட்டினுள் நுழைந்தான். நடு கூடத்திலிருந்த நாற்காலிகளில் ஒன்றில் உட்காரும்படி அவனை உபசரித்தாள் அந்த மங்கை. அவள் நெற்றியில் குங்குமம் இல்லாததை அப்பொழுது தான் கவனித்தான் அவன்.

அவள் "உங்கள் பேருபகாரத்தை நான் என்றென்றைக்கும் மறவேன். உங்கள் புண்ணிய பலத்தினால் தான் நாங்கள் இந்த மட்டிலும் நிம்மதியாகக் காலம் கழிக்கிறோம்" என்றாள்.

ராமுவுக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்தான் "எ...ன...க்கு உங்...க...ளை..."

"என்னைத் தங்களுக்குத் தெரியாது தான். நான்கு வருஷங்களுக்கு முன்பு நீங்கள் எங்கள் வீட்டிற்கு, புதிய மாம்பலத்திற்கு வந்திருந்தீர்களே, அன்று நீங்கள் என் அகத்துக்காரருக்கு அவ்வளவு நேரம் உபதேசம் செய்து இணங்க வைத்திருக்காவிடில் நாங்கள் இன்று நடுத்தெருவில் நின்று திண்டாட வேண்டி இருக்கும்..."

சுவரின் மீது புஷ்பஹாரம் ஒன்றால் அலங்கரிக்கப்பட்ட போட்டோவின் மீது ராமநாதனின் பார்வை விழுந்தது. அது போன வருஷம் காலம் சென்ற ஸ்ரீமான் வெங்கடேசனின் புகைப்படம் அம்மங்கையின் கணவனுடையது.

ராமநாதனுக்கு இப்பொழுது விஷயமனைத்தும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கிற்று. ராமநாதன் ஒரு இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்ட் என்பதை வாசகர்கள் இதற்குள்ளாக உணர்ந்திருக்கக்கூடுமல்லவா?

அட்டைப் படம்

பிரபல சினிமா
நடிகை
மிஸ் ஆன் மில்லர்.

இன்றைக்கும் உங்கள் இன்ஷ்யூரன்ஸ் மிக அவசியமே!

யுத்த கால நிலைமையை முன்னிட்டு எவ்வளவோ தற்காப்புகள் அத்யாவச்யமாக ஏற்பட்டு விட்டன. ஆனால் வாழ்க்கையில் விபத்துக்களினின்றும் பாதுகாப்பளிக்கும் இன்ஷ்யூரன்ஸ்தான் தற்சமயம் பிரதானமாக விருக்கிறது. இன்று இன்ஷ்யூரன்ஸிற்குள்ள அவசியம் என்றுமே இருந்ததில்லை.

யுனைடெட் இந்தியாவில் இப்பொழுதே ஒரு பாலிஸி எடுத்துக்கொண்டால் அது உங்களுக்கு அவசியமான பத்திரமும் பாதுகாப்பும் அளிக்கும். இந்தியாவில் ஸிவிலியன்களுக்கு வழங்கப்படும் எல்லா பாலிஸிகளுக்கும் பிரத்யேக சார்ஜ் ஏதுமின்றி யுத்த அபாய பாதுகாப்பு அளிக்கப்படும்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
'யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்'
எஸ்ப்ளனேட் : : : மதராஸ்.
இந்தியாவெங்கும் கிளைகளும் ஏஜன்ஸிகளும் உண்டு.
டிரஸ்டி : மதராஸ் கவர்ன்மேண்ட் அபீஷியல் டிரஸ்டி.

FOR FIRE & MOTOR CAR INSURANCE
CONSULT
UNITED INDIA FIRE & GENERAL INSURANCE Co, Ltd.,
UNITED INDIA LIFE BUILDING
Esplanade MADRAS.
Telephone 4241 P. O. Box 1207 Grams : UNIGEN.

கண்டு பிடித்தது யார்?

கிராமபோன்

இரவோ பகலோ எந்த சமயம் வேண்டுமானாலும் சரி! எந்த வித்வானாக விருந்தாலும் சரி! நேரே உங்கள் முன்பு உட்கார்ந்து பாடுவதைப் போல் கீர்த்தனைகளையும், சில்லரை உருப்படிகளையும் எவ்வளவு தடவை வேண்டுமானாலும் பாடச் சித்தமாயிருக்கிறதே இந்த கிராமபோன்! அதை முதலில் யார் கண்டு பிடித்தார் என்பதும், எப்பொழுதென்பதும் தெரியுமா?

★

ஹார்மோனியம்

'உங்காத்துக் குழந்தைக்குப் 'பொட்டி' வாசிக்கத் தெரியுமா! எங்காத்துலே ரூ. 35 கொடுத்து ஒண்ணு வாங்கித்து. இந்த குட்டிக்குத் தேர்ண்டை கொஞ்சம் பெரிசு! அதுக்காக பிடில்விட 'பொட்டி' தேவலை என்று பாட்டு வாத்தியார் சொன்னான். நீயும் ஒண்ணு வாங்கறதானே?' என்று ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் சம்பாஷிக்கக் கேட்கிறோம்.

ஆனால் இந்தப் பொட்டி என்பது 'ஹார்மோனியம்' தான். இதன் விலை வெகு மலிவாயிருந்தது. இப்போது என்னவோ! 'ஹார்மோனியம்' எப்பொழுது யாரால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது?

★

'லைப் போட்'

எதிரியின் சுரங்க வெடி மோதியதாலோ அல்லது 'டார்பிடோ' செய்யப்பட்டோ சிதைந்து போகும் கப்பலிலிருந்து தப்ப 'லைப் போட்' (ஆபத்துச் சகாயப் படகு)கள் உபயோகப்படுகின்றன. இவற்றில் ஏறிக் கொண்டு உயிர் தப்பி கரை சேரலாம். இதை முதலில் யார் கண்டு பிடித்தது என்ற தகவல் எல்லாருக்கும் தெரியுமா?

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன
இருபத்தாவது பண்டார சந்நிதிகளாகிய
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்மீது வாழ்த்துப்பா.

பூமேவு செங்கமலப் பொற்பாரும் வாவிகளும்
மாமேவு சோலை வளங்களுமே — தாமேவிச்
சித்தர் திருமூலர் சித்தம் சிவமாய
பத்தர் பலகோடி பாங்காக — நித்தமவ்வண்
தங்கித் தவம்புரியும் தண்மூதூர் சார்ந்தவர்கட்
கெங்குமிலா இன்பங்க ளீயுமூர் — வெங்குருவில்
"கொள்ளைகொள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்த" — வள்ளலுக்குக்
காணமோ ராயிரந்தான் கைக்கொடுத்த கண்ணுதலார்
பேணி யமர்ந்தருளும் பேரூரே — வாணுதலார்
அம்மை பசுவடிவாய் அண்ணலடி பூசித்த
செம்மை நலந்திகழும் சீரியவூர் — மும்மைக்கும்
ஆய பயனளிக்கும் ஆவடு தண்டுறையாம்
தூய பதிவிளக்கும் தொல்புகழோன் — மேயவருட்
"கண்ணுதலும் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்ற" — நண்ணுதிரு
மெய்கண்டான் சந்தானம் மேன்மையுற வைதிகஞ்சேர்
சைவம் விளங்கித் தகைமைபெறத் — தெய்வநிலை
அஞ்செழுத்தே தம்முருவக் காம்பெயராக்கொண்டுயிர்க்குத்
தஞ்சமென வந்த தயாவுடையான் — எஞ்சலிலாப்
பீடம் தனைவிளக்கும் பேரொளியான் பேரறிஞர்
நாடுங் குணமுடையான் நாவலர்க்கு — நாடறியச்
செல்வம் அளிப்போன் சிவாலயங்கள் செம்மையவாய்
மல்கும் படிபணிசெய் மாண்புடையான் — நல்லபெருஞ்
சீரார் முனிவரர்கள் செய்தவத்துக் காம்மடங்கள்
ஏரார் வகைபெருக்கும் இன்னருளான் — போராரும்
சேவேறும் வேல்கொடியான் சேவடிக ளேவழுத்தும்
தேவார மாதி திருமுறைகள் — நாவாரப்
பண்ணோடு பாடப் பயில்விக்கும் பள்ளிதனை
மண்ணோர்கள் வாழ வளர்த்திடுவோன் — எண்ணார்ந்த
நூல்க ளமைத்தொகுத்து நூண்ணறிவை மக்களுற
ஏல்வுடைத்தாய்ச் செய்யும் இயல்புடையான் — சால்பதனால்
திங்கள் சடைக்கணிந்த செல்வனார் சீர்விளக்கும்
எங்கள் சபைவளர்க்கும் இன்றுதை — நங்குரவன்
அம்பலவா ணப்பெரியோன் ஆண்டுபல இன்பமுடன்
இம்பருல கத்தி னிடைவாழ — எம்பிரமன்
ஆனந்தக் கூத்தன் அருளைப் பணிந்திடுவாம்
தேனுந்து பாதம் தினம்.

சித்திரபானுஷு
தைத்திங்கள்
28உ

ந. சிவகுருநாதன்,
சைவசித்தாந்த சபைத்தொண்டன்,
தூத்துக்குடி.

அவசியமானது தங்கமா? வெள்ளீயமா?

★

"நீலம்"

இப்போது நடக்கும் இந்த சர்வ சாதன யுத்தத்திற்கு வேண்டிய இன்றியமையாத சரக்குகளில் வெள்ளீயம் மிகவும் முக்கியமானதாகும். நாளைக்கு உலகத்திலுள்ள தங்கமும், வெள்ளியும் இருக்கும் இடமே தெரியாமல் போகிறதென்று வைத்துக்கொள்வோம். அதனால் தலை முழுகிவிடாது; ஆனால் வெள்ளீயம் போய்விட்டதென்றால் அதுவும் இந்த யுத்த காலத்தில் இல்லையென்றால் அப்படியே மூர்ச்சை போட்டுப் போக வேண்டியது தான்!

பல அரங்கங்களில் யுத்தம் தொடர்ந்து பரவி நடந்து வருகிறது. அங்கு போராடும் துருப்புகளுக்குக் கணக்கு வழக்குக் கிடையாது. இத் துருப்புகளுக்கு வேண்டிய ஆகாரங்கள், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் மத்திய கிழக்கில் போராடும் சைன்யங்களுக்கு உணவு அனுப்புகின்றனர்! இதை எப்படி அனுப்புகிறார்கள்? வெள்ளீயம் பூசப்பட்ட டின்களில் தான். எஃகு தகட்டில் வெள்ளீயத்தைப் பூசிடப்பாக்களாகச் செய்கிறார்கள். ஒரு டப்பாவுக்குப் பூசும் ஈயத்தின் அளவு என்னவோ ரொம்பக் குறைவு தான். ஆனால் பிரிட்டனில் இந்த தகர சம்படத் தொழிலுக்காக வருஷம் 50,000 டன் வெள்ளீயம் உபயோகிக்கப்படுகிறதாம்! இதிலிருந்து எவ்வளவு 'தகரடப்பா'க்கள் உற்பத்தியாகும் பாருங்கள்!

1810-ம் வருஷத்திலே முதன் முதலாக ஒரு இங்கிலீஷ்காரர் தகட்டில் வெள்ளீயத்தைப் பூசுவதைச் செய்து காட்டினர். அதற்குப் பிறகு தான் ஆகாரங்களை யெல்லாம் ஈயம் பூசிய டப்பாக்களில் போட்டனுப்ப ஆரம்பித்தார்கள். இப்போது வரும் பால்புட்டிகளை எல்லாம் இம்மாதிரி தான் அடக்கம் செய்து லக்ஷக்கணக்கில் கொண்டு வந்து குவிக்கிறார்கள். தகர டப்பாக்கள் தலைப்படுவதற்கு முன்பெல்லாம் கண்ணாடி ஜாடிகளில் தான் உணவுப் பதார்த்தங்கள் அடக்கம் செய்து அனுப்பப்பட்டு வந்தது.

பலவிதத்தில் உபயோகம்

வெள்ளீயம் ஆயிரக்கணக்கான காரியங்களுக்கு உபயோகப்படுகிறது. ஈயமில்லையானால் அச்சு எழுத்துகள் ஏது? அந்தச் சம்பந்தப்படுத்தித்தான் எழுத்துக்களைத் தயார் செய்கிறார்கள். மோட்டார்கார்களின் உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். இதற்கும் வெள்ளீயம் மிகவும் முக்கியம். சாதாரணமாக ஒரு சிறிய மோட்டார்காரைப் பார்த்தால் அதில் குறைந்த பட்சமாக 7 பவுண்டு வெள்ளீயமேனும் உபயோகப்படுத்தியிருப்பார்கள்.

கப்பல்கள் கட்டுகிறார்கள். அதற்கும் தான் வெள்ளீயம் தேவை, யுத்தத்துக்காக அமெரிக்காவில் பெரிய பெரிய கப்பல்களையெல்லாம் கட்டுகிறார்கள். சுமார் 20,000 டன் எடையுள்ள ஒரு கப்பலைக் கட்டுவதாக வைத்துக்கொண்டால் அதற்கு 17 டன் எடையுள்ள வெள்ளீயத்தை உபயோகிக்கவேண்டியிருக்குமாம். கம்பியில்லாத் தந்தி, குளிர்ந்த பானங்களைத் தயாரித்துக் கொடுக்கும் 'ரிப்ரிஜிரேட்டர்கள்,' விமானங்கள் முதலியவற்றிற்கும் இந்த உலோகம் அவசியமாகும். சிகரெட்டுப் பெட்டிகள், 'சாக்லெட்' பெட்டிகள், ஆகியவற்றை வைப்பதற்கும் வெள்ளீயம் பூசிய பெட்டிகள் வேண்டியிருக்கிறது. வெள்ளீயம் பல உலோகங்களில் சேர்ந்திருக்கிறது. மலேயாவிலுள்ள ஈபோ என்ற விடத்தில் அநேகம் ஈயச் சுரங்கங்கள் உண்டு. இப்பொழுது இவை யெல்லாம் எதிரியிடம் சிக்கியிருக்கின்றன.

சுரங்க வெடியின் சொரூபம்



இந்தியாவின் கீழ் கடற்கரை யோரத்தில் ஒதுங்கியிருந்த ஒரு சுரங்க வெடியின் தோற்றம். இதை எடுத்துக் கையாள சில கிராம வாசிகள் முற்பட்டதாகத் தெரிகிறது. ஒரு சுரங்க வெடியின் குறுக்களவு 2½ அடி முதல் 4 அடி வரை யிருக்கும். சாதாரணமாக இதன் நிறம் கறுப்பு; கடலில் இதன் நிறம் வேறு விதமாக மாறி விடுமாம். இதைத் தொட்டால் உயிருக்கே ஆபத்து.

★

போர் போகும் போக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சீனவுக்கு உதவச் சிறந்த வழி

தற்போது வாஷிங்டனிலுள்ள மாடம் சியாங்கேஷேக் "அதிகமான யுத்த சாதனங்களை அனுப்புவதன் மூலம் அமெரிக்கா சீனருக்குச் சிறந்த உதவிசெய்ய முடியும்" என்று கூறினர். கடவுள் அமெரிக்கரை எவ்வளவு துரிதமாக இவ்வுதவியைச் செய்ய அனுமதிக்கிறாரோ, அவ்வளவு துரிதமாக உதவி செய்யப்படுமென மிஸ்டர் ரூஸ்வெல்ட் தெரிவித்தார்.

சென்னை ரேடியோவில்

★

மார்ச்சு மாதம் 6-ந்தேதி

'மித்திரன்' வாரப் பதிப்பில் ஸங்கீத ரத்னகர, ஸங்கீத கலா நிதி அரியக்குடி

ஸ்ரீ டி. ராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியிருக்கும் ஸ்ரீ ச்யாமா சாஸ்திரிகளின் க்ருதிகளில் ஜனவரி 17-ந் தேதி இதழில் தோன்றிய 'ஓ ஜேகதம்பா' என்ற (ஆனந்த பைரவி) க்ருதியையும் இவ்வாரம் வெளிவரும் 'ப்ரோவ வம்மா' (மாஞ்சி) என்ற க்ருதியையும் மார்ச் மாதம் 6-ந்தேதியன்று இரவு சென்னை ரேடியோ கச்சேரியில் ஸ்ரீ அய்யங்கார் பாட இசைந்திருக்கிறார். வாசகர்கள் அவற்றைப் பயில்வதற்கு இது மிக்க வசதியாயிருக்கும்.

ஐரோப்பாவைத் தாக்க உறுதி

பிரிட்டிஷ் மந்திரி மிஸ்டர் ப்ரெண்டன் ப்ராக்கன ஆக்ஸ்போர்டில் பேசியதாவது:— ஐரோப்பாவில் பல இடங்களை நாம் தாக்குவது நிச்சயம். சந்தர்ப்பத்திற்கே காத்துக் கொண்டிருக்கிறோம்: இன்னும் ஜெர்மன் படை பலம் வலுத்தே இருக்கிறது. 1943-ல் ரஷ்யா மட்டுமே ஐரோப்பாவில் தனித்து யுத்தம் புரியவிடக்கூடாது என்பதே பிரிட்டிஷ் திட்டம்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

இது ஒன்றுதான் அசல் விஜய நகரம் மருந்து. குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்டு.

ஏமாந்த புலி

★

(ஆர். கே. பி.)

ஒரே ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் 'மஹா' ஸாது. அவன் தினந்தோறும் பக்கத்திலுள்ள வயலில் கஷ்டப்பட்டு வேலை செய்து ஜீவனம் செய்து வந்தான். சில சமயங்களில் வெகு தூரத்திலுள்ள காட்டிற்குச் சென்று விறகு வெட்டி வருவான். இம்மாதிரியாகக் கஷ்டமான வேலைகள் செய்து வீட்டிற்கு வேண்டியவைகளைச் சேகரித்து வருவான். ஆனால் புத்திசாலித்தனமான காரியங்கள் ஒன்றும் செய்யத் தெரியாது. பற்பல சமயங்களில் ஏதேனும் அசட்டுத்தனமான காரியங்களும் செய்வான். முன் பின் யோசிக்க மாட்டான். ஆனால் இவனுடைய மனைவி மிகுந்த புத்திசாலி. கணவன் செய்யும் அசட்டுத்தனமான காரியங்களை யெல்லாம் தனது சாமர்த்தியத்தினால் ஒருவாறு சமாளித்துக் கொள்வாள். நிறையப் பால் கறக்கும் பசுவொன்றை வைத்துக்கொண்டு, பால் தயிர் விற்றுக் குடும்பத்தின் வருமானத்தை அதிகரித்துவந்தாள்.

ஒரு நாள் குடியானவன் வழக்கம்போல் விறகு வெட்டிக்கொண்டு வரக் காட்டிற்குச் சென்றான். அன்று காட்டிற்குள் வெகு தூரம் சென்றுவிட்டான். முன்பின் யோசிக்கவில்லை. திடீரென இவனை நோக்கிப் புலியொன்று வந்தது. குடியானவனுக்கு உயிர் பாதி போய்விட்டது. புலி கிட்ட நெருங்கியவுடன் குடியானவன் கைகளைக் கூப்பிக்கொண்டு "புலியே, தயவு செய்து என்னைக் கொல்லாதே. நாளைக்கு என் வீட்டில் உள்ள கொழுத்த பசுவொன்றை உனக்கு ஆகாரமாக உன்னிடம் அழைத்து வருகிறேன்" என்று கூறினன். புலிக்குப் பசு என்றவுடன் ருசி தட்டியது, உடனே புலி 'நாளைக்கு நீ பசுவைக் கொண்டு வராவிட்டால் உன்னையும் பசுவையும் சேர்த்துக் கொன்று தின்றுவிடுவேன். ஜாக்கிரதை' என்று கூறி குடியானவனை விட்டுவிட்டது. குடியானவன் ஓடோடியும் வீட்டிற்கு வந்துவிட்டான்.

மறு நாட் காலை நடந்த சமாசாரத்தைக் கூறிப் பசுவைப் புலியிடம் ஓட்டிப் போக மனைவியிடம் உத்தரவு கேட்டான். குடியானவன் மனைவி அவனைத் திட்டினள். பின் தான் சொன்னபடி செய்தால் புலியை ஏமாற்றிவிடலாம் என்று சொல்லிப் புலியை விருந்திற்கு வீட்டிற்கு அழைத்து வரும்படியும் பின்பு தான் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வதாகவும் கூறியனுப்பினள் அவன் மனைவி.

குடியானவன் அம்மாதிரியே இவனுடைய வரவிற்குக் காத்திருந்த புலியிடம் சென்று அதை விருந்திற்கு அழைத்தான். 'வந்த விருந்தை விடுவானேன்' என்ற எண்ணத்துடன் புலியும் இவனுடன் வீட்டிற்கு வந்தது. வீட்டையும் பார்த்துக் கொண்டால் பின் அவனையும் அவன் மனைவியையும் பசுவையும் கொன்று விடலாம் என்று அது எண்ணியது. இதற்குள் குடியானவன் இவன் மனைவி எங்கெல்லாமோ சென்று இரண்டு புலித் தோலையும் சிங்கத்தின் தோலையும் வாங்கி வந்து வாசலின் வெளியே வெயிலில் காயப் போட்டிருந்தாள்.

புலி வீட்டை நெருங்கியது. இந்தத் தோல்களைப் பார்த்தவுடனேயே புலிக்குக் கிலி பிடித்தது. குடியானவன் ஒருகால் பெரிய வேடனாகவிருக்கலாமோ என்று சந்தேகம் உண்டாயிற்று. இதற்குள் குடியானவன் மனைவி வெளியே வந்து 'புலியாரே வாங்கோ வாங்கோ. நீங்கள் தான் என் கணவன் கூறிய புலியோ? உட்காருங்கோ. இன்று உங்களுக்காகக் கொழுத்த சிங்கமொன்றை நறுக்கிக் கறி செய்திருக்கிறேன். காலையில் தான் உயிருடன் என் கணவன் பிடித்து வந்தார்.' என்று உபசரித்தாள். புலிக்கு நடுக்கம் ஏற்பட்டது. ஏதேது! இவர்களிருவரும் மோசக்கார வேடர்கள். எனவே ஓடிப் போவதுதான் நலம் என்று தீர்மானித்து 'இதோ வருகிறேன், அதற்குள் இலையைப் போடுங்கள்' என்று கூறி புலி ஓட்டமெடுத்தது. குடியானவன் மனைவி தந்திரம் பலித்தது. உடனே இருவரும் 'இடி இடி' யென்று சிரித்தார்கள்.

புலி தலைகால் புரியாமல் ஓடுவதைப் பார்த்த நரியொன்று விஷயமென்னவென்று புலியைக் கேட்டது. புலி ஓட்டத்தை நிறுத்தவில்லை. நரியும் கூடவே ஓடி விஷயமென்னவென்று சொன்னால் உபாயமேதேனும் சொல்வதாக வாக்களித்தது. புலி விஷயத்தைச் சொல்லிவிட்டு மறுபடியும் ஓடப் பார்த்தது. உடனே நரி 'அடடா! அவர்கள் உன்னை ஏமாற்றிவிட்டார்கள். வா அங்கேயே போகலாம். அவர்களையே யுவிருந்து செய்யலாம்' என்று புலியைக் கூப்பிட்டது. புலி முதலில் மறுத்துவிட்டது. இருந்தாலும் சபலம். வேண்டாவெறுப்புடன் நரியுடன் பின்னலேயே பயந்து கொண்டு சென்றது.

நரியையும் புலியையும் பார்த்தவுடன் குடியானவன் கதி கலங்கிப் போனன். ஆனால் அவன் மனைவி பயப்படவேயில்லை. நரியும் புலியும் வீட்டிற்குள் வருவதற்கு முன்னமேயே அவள் எதிர் நோக்கிச் சென்று "நரியாரே வாரும் வாரும். ஓஹோ! இன்றைய் சமயலுக்கு இந்தப் புலிதானே அகப்பட்டது. இது இன்னும் கொழுக்கவில்லையே. நேற்று நீர் கொண்டுவந்த புலியின் பாதியளவுகூட இது இருக்காதே! ஹும் சரி சரி ஏதோ வந்ததை விடுவானேன். இன்றைக்கு இது போதும். நாளைக்கேனும் நல்ல கொழுத்த புலியாகக் கொண்டுவாரும். இதோ கத்தி கொண்டு வருகிறேன். நீரும் உழ்ந்து சிரமத்திற்கு வால் பக்கத்தை யெடுத்துக் கொள்ளும்" என்று கூறி உள்ளே போவதுபோல் பாசாங்கு செய்தாள். கேட்க வேண்டுமா! புலி இனி ஏன் அங்கே நிற்கிறது? நரியும் வஞ்சகமாகத் தன்னைக் கொலை செய்யவே இந்த சூழ்ச்சி செய்திருக்கிறது என்று எண்ணி ஓட்டம் பிடித்தது. போகிற போக்கில் நரியை ஓர் அறை அறைந்து சென்றது. நரி அங்கேயே இறந்துவிட்டது.

குடியானவனும் அவன் மனைவியும் அன்றிரவே மூட்டை கட்டிக்கொண்டு வேறொரு கிராமத்திற்குச் சென்றுவிட்டனர்.

செய்ரோவில் மிஸ்டர் சர்ச்சில்



சமீபத்தில் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் கெய்ரோவுக்குப் போயிருந்தார். ஜெனரல் ஆலன் புரூக், ஜெனரல் அலக்ஸாண்டர், மத்தியக் கிழக்கில் பிரிட்டிஷ் மந்திரியான மிஸ்டர் கேஸி முதலியவர்கள் படத்திலிருக்கின்றனர்.